JANASAKTHI | போன்: 84097 | 4 பக்கம் ஒரு அணு | மலர் 8 இதழ் 213 | இலங்கை 10 சதம் | REGD. NO. M. 5934

ஜனசக்தி

சென்னை	நந்தன, ஆடி 6உ	திங்கட்கிழமை	1952, ஜூலை 21
வெளியூர்	நந்தன, ஆடி 7உ	செவ்வாய்க்கிழமை	1952, ஜூலை 22

ஜப்பானியக் கம்பெனியின் ரூ. 13½ லட்சம் மோசடி!

பார்லிமெண்டில் நேரு அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 21—

பூமிக்கடியில் செல்லும் டெலிபோன் கேபிள்கள் வாங்குவதற்கு இந்திய சர்க்கார் ஒரு ஜப்பானியக் கம்பெனிக்கு ஆர்டர் கொடுத்திருந்தது. 687 மைல் நீளத்திற்கு கேபிள்கள் வாங்கினதற்கு ரூ. 81,90,413 செலவாயிற்று. ஆனால் அதில் 1,93,000 கெஜ நீளத்திற்கு (சுமார் 109 மைல்) அந்தக் கேபிள்கள் பழுதடைந்திருந்தன. (அதன் மதிப்பு சுமார் 13½ லக்ஷ ரூபாய்) இதுபற்றிப் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி கடுமையாக விமர்சனம் செய்திருந்தது.

இதுபற்றிப் பார்லிமெண்டில் இன்று கேள்விகள் எழுந்தபோது, பிரதமர் நேரு, அந்த நஷ்டத்திற்குக் குறிப்பிட்ட ஜப்பானியக் கம்பெனி ஈடுசெய்வதாக உறுதிமொழி அளித்திருப்பதாகக் கூறினர். (பி.டி.ஐ.)

மூல்தானில் மீண்டும் போலீஸ் தாக்குதல்

லாகூர், ஜூலை 21—

ஞாயிற்றுக்கிழமையன்று 144 தடையுத்தரவை மீறி மூல்தானில் நடத்தப்பட்ட இரண்டு ஊர்வலங்கள் மீது போலீஸ் கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசித் தாக்கின.

சனிக்கிழமையன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்து ஆறு பேர்களைச் சுட்டுக் கொன்றபின், நிலைமை மிகவும் இன்று நெருக்கடியாயிருக்கிறது. துப்பாக்கிப் பிரயோகத்தைப்பற்றி விசாரிக்க மூவர் கொண்ட கமிட்டியை பாகிஸ்தான சர்க்கார் நியமனம் செய்துள்ளது. இந்தப் போலீஸ் கொலை சம்பந்தமாக பாரபக்ஷமற்ற பகிரங்க விசாரணை நடத்தவேண்டுமென ஜமாயித்-எ-இஸ்லாமி என்ற ஸ்தாபனம் கோரியுள்ளது.

துப்பாக்கிப்பிரயோகத்தைக் கண்டித்து ராவல்பிண்டி நகரிலும், தான்டியாவாலாவிலும் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

"துரோகி சுல்தானேயை எதிர்த்து இறுதிவரை போராடுவோம்"

முஸ்ஸாதேக் கட்சியின் உறுதியான முடிவு

ஈரான் எங்கும் மக்களின் பேரெழுச்சி

பிரிட்டிஷ் நிபுணர்களை மீண்டும் அழைக்கும் மந்திரிக்கு பத்துவருட தண்டனைத் தீர்மானம்

டெஹ்ரான், ஜூலை 21—

"துரோகி கவாம் சுல்தானேயை பெர்சிய மக்கள் விரும்பவில்லை; வெறுக்கிறார்கள். எனவே, மஜ்லிஸ் அளித்த ஓட்டுகளும், மன்னரின் உத்தரவுகளும் அவரை அதிகாரத்தில் வீற்றிருக்க செய்ய முடியாது. பிரிட்டிஷ் சேவகனை சுல்தானேயை எதிர்த்து எங்கள் உடலில் இறுதி சொட்டு ரத்தம் உள்ளவரை போராடுவோம்" என ஈரானிய மாஜி பிரதமர் முஸ்ஸாதேக்கின் நண்பரும், மதத் தலைவருமான கஷானி இன்று அறைகூவினர்.

அமெரிக்க பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களுடன் ஈரானிய மன்னரும் சேர்ந்து செய்த தேசத்துரோக சதியின் விளைவாக, முஸ்ஸாதேக் ராஜினமா செய்ய நேர்ந்தது. யுத்த இலாகாவை முஸ்ஸாதேக்கிடம் கொடுக்க ஈரானிய மன்னர் மறுத்து இந்த நெருக்கடியை சிருஷ்டித்தார். பிரிட்டனின் நண்பனை கவாம் சுல்தானே பதவியேற்றுள்ளார்.

சுல்தானே பிரதமர் பதவி யேற்றதும், அவரை எதிர்த்து ஈரானபூராவும் ஆர்ப்பாட்டங்களும், ஊர்வலங்களும் மிகத் தீவிரமாக நடந்து கொண்டிருக்கின்றன. தலைநகரம் டெஹ்ரானிலும் அபாடான் எண்ணெ வயல்களிலும் ராணுவமும், பொதுமக்களும் பலதடவை மோதிக்கொண்டு கைகலக்க நேரிட்டது.

பொது ஜனக் கிளர்ச்சியை அடக்கு முறையின் மூலம் ஒடுக்கிவிட எண்ணும் சுல்தானே, ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனம் செய்துள்ளார். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டியே தீருவேன் என்ற ஆணவத்துடன் எல்லா ஜில்லா கவர்னர்களையும், ஸ்தல அதிகாரிகளையும் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி ரேடியோ மூலம் புதுப் பிரதமர் உத்திரவிட்டுள்ளார்.

டெஹ்ரான் வீதிகளில் கடைகள் மூடிக்கிடக்கின்றன. கவச மோட்டார்களும், டாங்குகளும் ரோந்து சுற்றிக்கொண்டிருக்கின்றன.

நேரடிப் பேச்சு வார்த்தைகள்மூலமாயினும் சரி அல்லது சர்வதேசக் கமிட்டிகள் மூலமாயினும் சரி அபாடான் எண்ணெ வயல்களுக்கு மீண்டும் பிரிட்டிஷ் தொழில் நிபுணர்கள் திரும்பி வருவதற்கு எந்த பிரதம மந்திரியாவது அல்லது இதர மந்திரியாவது ஒப்புக் கொண்டால், அவருக்கு 10 வருட கடினகாவல் தண்டனை அளிக்கக் கூடிய ஒரு தீர்மானத்தை பார்லி

(2-ம் பக்கம் பார்க்க)

கடைசிச் செய்தி

டெஹ்ரான் ஜூலை 21—

மாஜி ஈரானிய பிரதமர் முஸ்ஸாதிக்கை ஆதரித்து ஆர்ப்பாட்டம் நடத்திய ஆயிரக்கணக்கான மக்கள்மீது போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கலைத்தனர். சுமார் 15 பேர் கொல்லப்பட்டனர்.

பாங்கி சிப்பந்திகளின் பஞ்சப்படி உயர்வு நிராகரிக்கப்பட்டது

பம்பாய், ஜூலை. 21—

அகில இந்திய தொழில் நீதிமன்றம் இன்று, சென் கோர்ட் தீர்ப்புப்படி இடைக்கால நிவாரணமாக அதிக பஞ்சப்படி கோரிய பாங்க் சிப்பந்திகளின் கோரிக்கையை நிராகரித்துத் தீர்ப்பளித்தது. உடனே தொழில் கோர்ட் நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று தொழிலாளர் பிரதிநிதிகள் கேட்டனர். ஆனால் நீதிபதி நிராகரித்துவிடவே, பாங்க் சிப்பந்திகள் அனைவரும் கோர்ட் அறையை விட்டு வெளியேறினர்.

கனம் கிரியின் செப்பிடு வித்தை!

பொன் முட்டையிடும் வாத்தை கொன்று விடாதேப்பா

?!

தொழிலாளி

கிரி

கொழுத்த முதலாளி

ஆள் குறைப்பு

வேலை பளு

சம்பள வெட்டு

S.R.

ஆந்திர மாகாண அமைப்பு தீர்மானம்

டில்லி ராஜாங்க சபையில் தோற்றது

புதுடில்லி, ஜூலை 21—

டில்லி மேல்சபையில் ஆந்திர மாகாணத்தை உடனே அமைப்பதற்கான நடவடிக்கைகளை சர்க்கார் மேற்கொள்ள வேண்டுமென்று கொண்டு வரப்பட்ட உத்தியோகப்பற்றற்ற தீர்மானம் 114 ஓட்டுகள் பாதகமாகவும் 26 ஓட்டுகள் சாதகமாகவும் பெற்றுத் தோல்வி யடைந்தது.

அதுபற்றி பதிலளிக்கும் போது பிரதமர் நேரு கூறியதாவது: ஆந்திர மாகாணத்தை அமைப்பதற்கான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்ந்து கடிதப் போக்குவரத்து நடத்திக்கொண்டிருப்பதாக அவர் கூறினர்.

1949 அக்டோபர் அல்லது நவம்பர் வாக்கிலே, சென்னை சட்ட சபையைக் கலந்து கொண்டு சகல நடவடிக்கைகளையும் மத்தியசர்க்கார் எடுத்துள்ளதால், இந்தத் தீர்மானம்காலங் கடந்தாகும் என்று கூறினர். ஆந்திர மாகாணத்தை அமைத்து விடுவதென்றும், அரசியல் சட்டத்தில் சேர்த்து விடுவதென்றும், இருக்கும் தருணத்தில் தான் சில பிரச்னைகள் முளைத்தன என்றுர்.

இது சம்பந்தமாக சகல கட்சிகளையும் இணங்க வைக்க தனது செல்வாக்கு அனைத்தையும் உபயோகிக்கத் தயார் என்றும், ஆனால் கட்சிகளுக்கிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்படவேண்டியதுதான் கடைசியான சங்கதி யென்றும் கூறினர்.

சகல விஷயங்களிலும் ஒப்பந்தம் ஏற்படாவிட்டாலும் சென்னை நகரம் போன்ற முக்கியமான விஷயங்களிலாவது சம்பந்தப்பட்ட முக்கியமான கட்சியார்கள் ஓரளவு ஒற்றுமைக்கு வரவேண்டியது மிக அவசியமாகும் என்றுர்.

அமைக்கப்படப்போகும் ஆந்திர ராஜ்யத்தில் தெலிங்கானாப் பகுதிகளை சேர்க்க சர்க்கார் தயாராயிருக்குமா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, "இல்லை" என்று அழுத்தந் திருத்தமாக பிரதமர் நேரு ஒரு கேள்விக்கு பதிலளித்தார்.

அசெம்பளிவிவாதம்

பிரிட்டிஷ் முதலாளிகளுக்கு சாதகமானதே சர்க்காரின் தொழில் கொள்கை?

ஒரு இரும்புத் தொழில் கூட இல்லையே!

சென்னை, ஜூலை 21—

தொழில் மந்திரி டி. கிருஷ்ணாராவ், இன்று சட்டசபையில் தொழில் இலாகாவிற்கு ரூ. 23,46800 மான்யம் வேண்டுமென்று கோரினர்.

தோழர் சி. வி. கே. ராவ் தொழில் மான்யத்தை எதிர்த்துப் பேசியதாவது:—

"இன்றுள்ள நம்நாட்டின் தொழில் நிலை பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிகாலத்தில் இருந்ததுபோலவே இருக்கிறது. தொழில் வளர்ச்சி இல்லாமல் இன்றுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கமுடியாது. மந்திரியின் பிரசங்கம் 20 வருஷத்திற்கு முன் செய்திருக்கவேண்டும். சென்னை சர்க்காரின் தொழில் கொள்கை இங்குள்ள பிரிட்டிஷ் மூலதனத்திற்கு எவ்வித பாதகமும் ஏற்படாத விதத்தில் இருக்கிறது. ரூபாயில் ஏழு பைசாதான் தொழிலுக்காகச் செலவிடப்படுகிறது. இதில் 5 பைசா. ரூபாயில் 10 அணு தொழில் சாமான்களிலிருந்து விற்பனை வரியாக சர்க்காருக்கு வருமானம் வருகிறது. ஆனால் தொழில் வளர்ச்சிக்கு ஏழு பைசா தான.

பாரி அண் கோ, இம்பீரியல் புகையிலை கம்பெனி போன்ற அன்னிய கம்பெனிகள் நம் மக்களைக் கொள்ளையடிக்கின்றன. இதற்கு ஒரு முடிவு கட்ட சர்க்கார் தயாரா?

சர்க்காரால் நடத்தப்படும் தொழிற்சாலைகளில் எவ்வளவு லாபம் கிடைக்கிறது, எந்த விதத்தில் இன்னும் இயற்கை சாதனங்களை உபயோகித்து தொழிலை வளர்க்க சர்க்கார் திட்டமிட்டுள்ளது என்பதை மந்திரி விளக்கி இருக்கவேண்டும்.

இன்று சர்க்காரால் நடக்கப்படும் தொழில் சாலைகளில் தொழிலாளர்களின் நிலைமை மிக மோசமாக உள்ளது. தேசியத் தொழில்களை வளர்க்க சர்க்கார் முனவந்து அன்னியச் சுரண்டலுக்கு முடிவு கட்ட வேண்டும்.

நம் நாட்டில் கிடைக்கும் பணத்தைச் சேகரித்து, இங்குள்ள இயற்கை சாதனங்களை கொண்டு புதிய தொழில்களை ஆரம்பித்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவேண்டும். [illegible] குடிசைத் தொழில்களை கூட பாதுகாத்து வளர்க்க இன்று சர்க்கார் தயாராக இல்லை.

இன்று கைத்தறி நெசவுத் தொழிலிலுள்ள நிலைமையே இதற்குநல்ல எடுத்துக்காட்டு.

இன்று சென்னை சர்க்கார் சரியான விதத்தில் டெக்னிக்கல் படிப்பை கூட மாணவர்களுக்கு அளிக்கத் தயாரில்லை. இலவசச் சம்பளம் போதிய மாணவர்களுக்கு அளிக்க வேண்டும்.

சர். எம். விஸ்வேஸ்ரய்யா திட்டமான ஒவ்வொரு கிராமத்தையும் ஜில்லாவையும் அடிப்படையாகக் கொண்டாவது தொழில் வளர்ச்சிக்குத் திட்டமிட சர்க்கார் தயாரா?

தொழிலாளர் கவுன்ஸில்களை ஏற்படுத்தி அவர்களது ஆலோசனையையும் கேட்டு புதிய தொழில்களை சர்க்கார் வளர்க்க முன்வர வேண்டுமென்று கூறு தோழர் சி. வி. கே. ராவ் எதிர்தரப்பின் சார்பில் வெட்டுப் பிரேரபணையைக் கொண்டு வந்தார்.

அடுத்துப்பேசிய காங்கிரஸ் மெம்பர் சி. ஆர். ராமசாமி தென்னாற்காடு ஜில்லாவில் உள்ள இரும்பு போன்ற உலோகத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்றும் ஒரு சிறு ராஜ்யமான மைசூரில் இரண்டு இரும்புத் தொழில் சாலைகளிருக்கிற போது நம் மாகாணத்தில் ஒன்றுகூட ஆரம்பிக்கக் கூடாதா என்று கேட்டார்.

நம் நாட்டில் குடிசைத் தொழில் என்பது தோண்டிகளும் பக்கெட்டுகளும் செய்வதுதானென்று ஒவ்வொரு குடிசைத் தொழிலையும் மின உபயோகிக்கும் சிறு யந்திர தொழிற்சாலையாக என்று மாறப்போகிறது என்று கேட்டார் திரு. சி. ஆர். ராமசாமி.

(2-ம் பக்கம் பார்க்க)

எகிப்து பிரதமர் சிரி பாஷா ராஜினமா

மத்திய கிழக்கில் மீண்டும் நெருக்கடி

கெய்ரோ, ஜூலை 21—

எகிப்து பிரதமர் சிரி பாஷா நேற்றைய தினம் ராஜினமா செய்துவிட்டார். இந்தச் செய்தி 12 மணி நேரம் எகிப்து தணிக்கை அதிகாரிகளால் தடை செய்யப்பட்டு பிறகு எந்தவித விமர்சனமும் இன்றி கெய்ரோ ரேடியோவில் அறிவிக்கப்பட்டது.

ராஜினமாவை எகிப்து மன்னர் பரூக் ஏற்றுக்கொண்டுவிட்டார் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. ஆனல் இரவில் நேரங்கழித்து மன்னர் சபையின் தலைவர் ஹபீஸ் அபீபி பாஷா அதிகாரபூர்வமானதொரு அறிக்கையில் அதை மறுத்தார். "தன்னையோ, மற்றவர்களையோ மந்திரி சபையமைக்கும்படி மன்னர் கேட்டுக்கொள்ளவில்லை" என்றும் தெரிவித்தார். "பிரதம மந்திரி பதவியை ராஜினமா செய்துவிடும் முடிவை தாம் கைவிடவில்லை என்றும் சிரிபாஷா என்னிடம்கூறினர்; மந்திரிசபை நெருக்கடியை மன்னர் நாளையதினம் கவனிப்பார்" என்றும் அறிவித்தார்.

அறிக்கை அப்படியிருக்தாலும், லிபரல் சட்டக் கட்சித் தலைவர் சைக்கல் பாஷாவையும், சாடிஸ்ட் கட்சித் தலைவர் இப்ரஹிம் ஹாதி பாஷாவையும், இதர சுயேச்சை அரசமைப்பாளர்களையும் அபீபி பாஷா கலந்தாலோசித்து வழிகிறார் என்று விஷயமறிந்த அரசியல் வட்டாரங்கள் நம்புகின்றன என்று பி.டி.ஐ. கூறுகிறது.

நேற்று முன்தினம் அமெரிக்க ஸ்தானீகர் ஜெபர்சன் காபரே மன்னரை சந்தித்ததும், மேலைய ஏகாதிபத்திய வல்லரசுகள் எகிப்தை மத்திய கிழக்கு யுத்த கூட்டணியில் மா[illegible] பிரம்மப்பிரயத்தினம் [illegible]செய்து வருவதும் வாசகர்கள் நினைவிலிருக்கும்.

உணவு இயக்கத்தின் மீது அடக்குமுறை!

106 பேர் கல்கத்தாவில் கைது

இந்தூரில் இதுவரை 72 பேர் கைது

கல்கத்தா, ஜூலை 20—

ஐக்கிய பஞ்சஎதிர்ப்புக் கமிட்டியின் அறைகூவலுக்கிணங்க ஆஸாத் ஹிந்த்பாக்கில், 144 தடை யுத்தரவை எதிர்த்து கூட்டம் நடத்த முயற்சித்ததற்காக 106 பேர் கைது செய்யப்பட்டனர். அப்போது நடந்த கைகலப்பில் 13 பேர் காயமடைந்தனர். இதில் ஒரு போலீஸ் அதிகாரியும், 7 போலீஸ்காரர்களும் சேர்ந்துள்ளனர்.

கூட்டம் நடத்த முயற்சிக்கப்பட்டபோது தடியடிப் பிரயோகம் நடந்தது. பட்டாசுகள் வீசப்பட்டன. கூட்டத்தின் மீது கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்யப்பட்டது. கொஞ்ச நேரத்திற்குப் போக்குவரத்து ஸ்தம்பித்துவிட்டது. நாட்டு வெடி குண்டுகள், கற்கள், வெங்நீர் ஆகியவை வீசப்பட்டன. 7-45 (இரவு)க்கு நிலைமை கட்டுக்கடங்கி விட்டதாகப் போலீஸ் அறிவித்தது. போலீஸ்காரர்கள் சென்ற பிற்பாடு ஆஸாத் ஹிந்த் பாக்கை சுற்றி ஒரு ஊர்வலம் கொண்டு செல்லப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் நடத்திய கூட்டத்தில் மே. வ. அரசாங்கத்தின் உணவுக் கொள்கையை எதிர்த்து இயக்கம் நீடிக்கும் என பலர் பேசினர்.

ஐ. ப. எ. கமிட்டியின் அறிக்கை ஒன்றில் தங்களுடைய முழு திட்டத்தை ராஜ்ய உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் ஏற்கும்வரை உணவுப்போராட்டம் நீடிக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் போராட்டம் இத்வாய் திட்டத்திலிருந்து மாறுபட்டதென்றும், போராட்டம் ஜில்லாக்களுக்கும் பரவுமென்றும் திரு. சுபோத் பானர்ஜி எம். எல். ஏ. கூறினர்.

இந்தூர், ஜூலை, 20—

சோஷலிஸ்டுகளின் உணவு இயக்கத்தை எதிர்த்துக் காங்கிரஸ்காரர் போட்ட கூட்டத்தைக் கலைக்க முயன்ற ஒரு கூட்டத்தின்மீது போலீஸ் தடியடிப் பிரயோகம் செய்தது. 5 போலீஸ் உள்பட 8 பேர் காயமடைந்தனர். 22 பேர் கைது செய்யப்பட்டனர். 144 தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஊர்வலங்கள் நடத்துவது, அரசாங்க தானியக் கிடங்குகளை நோக்கிச் செல்வது போன்ற நடவடிக்கைகளுடன் உணவு தானிய விலைக் குறைப்பு இயக்கத்தை சோஷலிஸ்ட் கட்சி ஜூலை 18ல் துவங்கியது. இதுவரை 72 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

1–8–52

தஞ்சை ஜில்லா விவசாயிகள் மகாநாடு

நிலத்திலிருந்து விவசாயிகளை வெளியேற்றுவ[illegible] எதிர்த்து தஞ்சை ஜில்லா விவசாயிகள் மகாந[illegible] 1—8—52ல் சென்னை ராஜ்ய ஜனநாயக ஐக்கிய முன்ன[illegible]யின் தலைவர் டி. பிரகாசம் தலைமையில் நடைபெறும்.

பி. ராமமூர்த்தி, எம்.எல்.ஏ.	மணலி கந்தசாமி, எம்.எல்.ஏ.
சுப்பையா ,,	வடிவேலு ,,
பி. வெங்கடேசன் ,,	என். சிவராஜ் ,,

சிவகுருநாத பிள்ளை (தலைவர், தஞ்சை ஜில்லா விவசாயிகள் சங்கம்) ஆகியோர் மகாநாட்டில் கலந்துகொள்[illegible] மகாநாடு கூடும் இடம் விரைவில் அறிவிக்கப்படு[illegible]

கே. பி. ந[illegible]

காரியதரிசி, தஞ்சை ஜில்லா விவசா[illegible]

டூனிஷ்யா பற்றி ஐ. நா. விவாதிக்காது

ஆசிய ஆப்ரிக்க நாடுகளின் முயற்சி தோல்வி

ஐ. நா. ஜூலை 20—

ஐ. நா. பொது அசெம்பிளியில், டூனிஷியாவில் பிரஞ்சுக்காரர்களின் அடக்குமுறை ஆட்சியை விவாதிக்க வேண்டுமென ஆசிய ஆப்ரிக்க நாடுகள் செய்த கூட்டு முயற்சி தோல்வியடைந்து விட்டது.

எவ்வளவு நாடுகள் இந்தக் கோரிக்கையை ஆதரித்தன என்ற புள்ளி விவரம் நாளைக்குத் தான் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படும்.

டூனிஸ், ஜூலை 20—

இன்று ஒரு துப்பாக்கிப் [illegible]யோக சம்பவமும், 3 வெடிகுண்டு வீச்சுகளும் டூனிஷ்யாவில் நடந்தன.

ஒரு இரவு காவல்காரன் குண்டு வீச்சில் படுகாயமடைந்தான். ஒரு சென்யாட் மோக்னேன் போலீஸ் ஸ்டேஷன் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. ஐரோப்பிய ஓட்டல்ஒன்றில் கைவெடிகுண்டு ஒன்று போடப்பட்டதால் படுசேதமேற்பட்டது. டூனிஷ் நகர மத்தியில் மற்றொரு குண்டு வெடித்தது. ஆள்சேதமில்லை சொத்து சேதம்தான் அதிகம்.

டூனிஷிய மக்கள் பிரஞ்சு ஏகாதிபத்திய வெறியரை எதிர்த்து மூர்த்தண்யமாகப் போராடிக் கொண்டிருக்கிறுர்கள். எந்த அடக்கு முறையாலும் அவர்களை நசுக்கிவிட முடியாது. ஐ. நா. அவர்கள் பிரச்னையை விவாதிக்க மறுத்துவிட்டது. ஆனல் டூனிஷிய மக்களின் பதிலை பிரஞ்சு ஏகாதிபத்தியம் பெற்றே தீரும்!

சோவியத் பத்திரிகை அம்பலமாக்குகிறது

டோக்கியோ, ஜூலை, 20—

நேற்றும் அமெரிக்க விமானங்கள் யாலு மின்சார நிலையங்களின்மீது கடும் குண்டு வீச்சு நடத்தின.

இது பற்றி சோவியத் பத்திரிகை இஸ்வெஸ்தியா எழுதும்போது:—

"கொரியாவில் அமெரிக்கர்கள் பெரிய அளவில் யுத்த நடவடிக்கைகளை ஆரமபிக்கும் தருணத்திலிருக்கின்றனர். கொரியாவில் ஏராளமான அமெரிக்க ஜெனரல்கள் வந்திறங்கியிருப்பது ஏதோ தற்செயலாக ஏற்பட்ட நிகழ்ச்சியல்ல. மேலும் மேலும் விரிந்த அளவில் ராணுவத் தாக்குதல்களை நடத்த அமெரிக்க திட்டமிட்டு வருகிறது. யாலு நதிதீர குண்டு வீச்சுகள், ஒரு மிகப் பெரிய கோடைகாலத் தாக்கு[illegible] முன் எடுபாடே" [illegible]டியது.

"விஷக் கிருமிகளை உபயோகித்தது உண்மையே"

அமெரிக்க ஜெனரல் வான் ப்ளீட் ஒத்துக் கொண்டுள்ளார்

பீகிங் ரேடியோ அறிவிப்பு

டோக்யோ, ஜூலை, 20—

டோக்யோவில் முன்னுள்ள பெல்ஜிய ஸ்தானீகராலய அதிகாரியான மேஜர் ஜெனரல் டிலா சிவாலரி என்பவர் பெல்ஜிய அயல்நாட்டிலாகா மந்திரிக்கு எழுதிய கடிதத்தில், "கொரியாவில் தான விஷக்கிருமிகளைப் பிரயோகித்துவருவதாக அமெரிக்க ஜெனரல் வான் ப்ளீட் தன்னிடம் ஒத்துக்கொண்டுள்ளார்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதை பீகிங் ரேடியோ இன்று ஒலிபரப்பியது.

பீகிங் ரேடியோ மேலும் கூறுகையில், "கிருமி யுத்தம் பற்றி டிலா சிவாலரி வான் ப்ளீட்டைக் கேட்டபோது.

"வெற்றி யடைவதற்காக, கூட்டம் கூட்டமாக மக்களைக் கொல்லும் முறைகளை அமெரிக்கத் துருப்புகள் அனுஷ்டிப்பதில் ஆச்சரிய மொன்றுமில்லை "என்று குறிப்பிட்டார், என்றும் டிலா சிவாலரி தான் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடுகிருர்."

அமெரிக்க குண்டு வீச்சு!

10,000 பேர் கொல்லப்பட்டனர்

லண்டன், ஜூலை 20—

வட கொரியத் தலைநகர் பியாங்யாங் மீது அமெரிக்க விமானக் கொடியர்கள் இன்று நடத்திய கொலைகார குண்டு வீச்சினல் நெருப்புப்பற்றி எறிந்தவர்களும், கை கால் ஒடிந்தவர்களும், உயிர் துறந்தவர்களும் 10,000 பேர் ஆவர் என்று நவசீன செய்தி ஸ்தாபனம் இன்றிரவு கூறியது.

மேற்குறிப்பிட்ட குண்டுவீச்சின் போது 1000 ராணுவ கேந்திரங்களைத் தாக்கியதாக அமெரிக்க அதிகாரிகள் விடுத்த ஒரு அறிக்கையை சீன [illegible]ய்திஸ்தாபனம் மறுத்[illegible] [illegible]ல் சாதாரண மக்கள் வாழும் பிரதேசத்தில் தான் குண்டுகள் பொழியப்பட்டன என்று அதுகூறிற்று. எந்த வடகொரிய ராணுவ கேந்திரத்தின் பெயரையும் அமெரிக்கர்களால் குறிப்பிட முடியவில்லை என்றும் அது கூறிற்று. 'நபாம்' எரிகுண்டுகளை அமெரிக்கா வீசியதையும் அது கண்டித்தது.

"இத்தகைய கொலைவெறிச் செய்கைகளால் சமாதானத்தை அருகில் கொண்டு வந்துவிடலாம் என்று அமெரிக்கர்கள் பாசாங்கு செய்வதை அம்பலப்படுத்தவேண்டிய காலம் வந்துவிட்டது. இது எந்த சமரஸம் ஏற்படுவதையும் மிகவும் கஷ்டமானதாகவே ஆக்கும்" என்று அது மேலும் கூறியது.

ராணுவ பலம்கொண்டு பயமுறுத்த அமெரிக்கா முயற்சி

சீனுவின் குற்றச்சாட்டு!

டோக்யோ, ஜூலை 20—

பான்முன்ஜாம் யுத்தநிறுத்தப் பேச்சுவார்த்தைகளில் தன்னுடைய ராணுவ பலத்தைக் காட்டி பயமுறுத்தித் தன் காரியத்தை சாதித்துக் கொள்ள அமெரிக்கா முயற்சிக்கிறது என்று நவசீன செய்தி ஸ்தாபனம் இன்று குற்றம் சாட்டியது.

"ரகசியக் கூட்டத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருக்கும்போது நிராயுதபாணிகளான பியாங்யாங் மக்களின்மீது இரவு நேரங்களில் கொடிய விமானத் தாக்குதல்கள் நடத்துவது இரண்டு தரப்பாரும் ஒத்துக் கொள்ளக்கூடிய சமாதான மான முடிவை ஏற்படுத்துவதல்ல அமெரிக்காவிரும்புவது என்பதைத் தெட்டத் தெளிவாக்கிவிட்டது" என்று அச் செய்திஸ்தாபனம் மேலும் கூறியது.

இன்று பான்முன்ஜாமில் 12 நிமிஷ நேரமே யுத்தநிறுத்தப் பேச்சுகள் நடந்து முடிவுற்றது.

அமெரிக்க உளவுவேலைச் சதி!

கம்யூனிஸ்ட் யுத்தக் கைதிகளை வட கொரியாவில் யுத்த அரங்கத்தின் பின்னணியில் பாரசூட்டுகளின்மூலம் இறக்கி வட கொரியாவுக்கு விரோதமாக உளவு வேலை பார்க்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் என்று கம்யூனிஸ்ட் பிரதிநிதி அமெரிக்காவின் மீது இன்று குற்றம் சாட்டினர். இவ்வாறு பாரசூட்டுகளின் மூலம் இறக்கப்பட்ட கம்யூனிஸ்ட் யுத்தக் கைதிகளை "தப்பியோடி விட்டார்கள்" என்று பின்னர் அமெரிக்க ராணுவத் தலைமை அறிவிக்கும் அயோக்யத் தனத்தையும் கம்யூனிஸ்ட் பிரதிநிதி அம்பலப்படுத்தினர்.

"அபிப்பிராயம் வெளியிடும் சுதந்திரம் தமது பிறப்புரிமை. அரசியல் சட்டத்தின் மூலம் ஆதாரபூர்வமாக உத்தரவாதம் செய்யப்பட்டதொரு [illegible] நாம் ஒப்புக்கொள்ளமாட்டோம்."

ஜனசக்தி

திங்கட்கிழமை 21-7-'52

ராஜாஜியின் கண்துடைப்பு

சென்னை ராஜ்யமெங்கும் கைத்தறிக்காரர்கள் வேலையின்றி பரிதவிக்கின்றனர். 5 லட்சம் குடும்பங்கள் பட்டினி கிடக்கின்றன.

மார்க்கெட்டிலும், மாஸ்டர் வீவர்களிடமும், கூட்டுறவு சொசைட்டிகளிடமும் சுமார் 8 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறி ஜவுளி வாங்குவாரின்றி தேக்கமுற்றுள்ளதே இந்த நிலைமைக்கு உடனடியான காரணமாகும்.

இந்தத் தேங்கிப்போன துணியை சர்க்காரே வாங்கிக் கொண்டு, தொழில் உடனடியாகத் துவங்குவதற்கு வழி செய்யவேண்டுமென்று ராஜ்யமெங்கும் கைத்தறிக்காரர்கள் கோருகின்றனர்.

சைதாப்பேட்டையில் ஞாயிறன்று பேசும்போது இந்தக் கோரிக்கையை ராஜாஜி நிராகரித்தார். அது மட்டுமல்ல. இது பரிகாரமாகாது என்றும் கூறியுள்ளார்.

வேறு அவர் என்னதான் பரிகாரம் காணப்போகிறார்? கைத்தறிக்காரர்களின் பிரச்சினை, கைத்தறி துணிக்கு நிரந்தரமான உள்நாட்டு மார்க்கெட்டைத் தேடுவதாகும். இதற்காக, வேஷ்டிகளும், கரைபோட்ட புடவைகளையும் மில்கள் உற்பத்தி செய்யக்கூடாது என்று தடை விதிக்கும்படி அவர் மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறாராம். இது நிறைவேறினால், கைத்தறிக்காரர்கள் என்றென்றைக்கும் சுபிட்சமாக வாழ முடியும் என்று ஆறுதல் கூறியிருக்கிறார்.

ஸ்ரீ. ராஜகோபாலாச்சாரியாரோ, ஒரு விஷயத்தை மறைக்கிறார். இன்று கைத்தறி துணிக்குமட்டுமல்ல, மில் துணியும் தேங்கிக் கிடக்கிறது. இதற்கு அடிப்படைக் காரணம் நாட்டு மக்கள் இந்த காங்கிரஸ் ஆட்சியில் மேலும் மேலும் ஓட்டாண்டிகளாகிக் கொண்டே வருவதுதான்.

காங்கிரஸ் ஆட்சிபீடத்தில் ஏறுவதற்கு முந்திய வருஷமாகிய 1945-46 வருஷத்தில் இந்திய மில்கள் உற்பத்தி செய்த துணி மொத்தம் 463½ கோடி கஜம். அது படிப்படியாகக் குறைந்து கொண்டே போய் 1950-51-ல் 367½ கோடி கஜத்திற்கு வந்துவிட்டது. அதாவது உற்பத்தியில் 25 சதம் குறைந்துவிட்டது.

கைத்தறித் துணி உற்பத்தியும் முன்பு வருஷத்திற்கு 160 கோடி கஜமாயிருந்தது, 100 கோடி கஜமாகக் குறைந்து விட்டது.

ஆக மொத்தம் 467½ கோடி கஜம் மில் துணியும் கைத்தறி துணியுமாகச் சேர்த்து உற்பத்தியாயின. சுமார் 80 கோடி கஜத்திற்கு மேல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

ஆகவே, உள்நாட்டு மக்களின் தேவைகளுக்காக எஞ்சியிருப்பது 380 கோடி கஜம் துணிதான்.

38 கோடி மக்கள் வசிக்கும் இந்நாட்டில், இத்துணி, சராசரி வருஷத்திற்கு நபர் ஒன்றுக்கு 10 கஜம் கிடைப்பதற்குக்கூட போதவில்லை.

ஆனால், வருஷத்திற்கு சராசரி 10 கஜம்கூட துணி விற்பனை செய்ய முடியவில்லை என்பது எதைக் காட்டுகிறது? நாட்டு மக்கள் எவ்வளவு வறுமையில் உழல்கின்றனர் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு இது.

ஆகவே, உள்நாட்டு மார்க்கெட்டுப் பிரச்சினை என்பது மில் துணிக்கும், கைத்தறித் துணிக்கும் ஏற்பட்டுள்ள போட்டியினால் ஏற்பட்டதல்ல. ஜனங்களின் வறுமையினால் ஏற்பட்ட பிரச்சினை என்பது தெளிவு.

இந்நாட்டில் உள்ள மில்களின் பூரண உற்பத்தி நடந்து, கைத்தறிகள் பூராவும் வேலை செய்தாலும் ஜனங்களுடைய தேவைகளுக்குப் போதிய துணி கிடைக்காது. ஆனால் அவர்களுடைய சக்திக்கு அதிகமானது [illegible] இன்றைய குறைவான உற்பத்தி.

எனவே, பிரதானமான பிரச்சினை மக்களின் வருமானத்தைக் குறிப்பாக விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த வழி செய்யக்கூடிய நடவடிக்கை எடுக்காதவரையில், இந்தப் பிரச்சினை தீராது என்பது திண்ணம்.

அப்படிப்பட்ட நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட்டாலும் அவை பலனளிப்பதற்குச் சிறிது காலம் ஏற்படலாம். அதுவரையிலும் தேங்கியுள்ள துணியை விற்பனை செய்வதற்கு வழி செய்ய வேண்டாமா?

இந்தத் துணியின் விலையைக் குறைத்துக் கொடுத்தால் மக்கள் வாங்குவார்கள். ஆனால் நெசவாளர்களோ அதிகச் செலவில், அதிக விலை கொடுத்து நூல் வாங்கி, இந்த ஜவுளியை உற்பத்தி செய்துள்ளனர்.

இந்த அதிக விலைக்கு சர்க்கார்தான் காரணம். அதுதான் நூல் விலையை உயர்த்திக்கொண்டே வந்திருக்கிறது. சமீபத்திலும் மீண்டும் உயர்த்தியுள்ளது. எனவே, நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு உடனடியாக இந்தத் தேக்கமுற்ற ஜவுளியை வாங்க வழி செய்வது சர்க்காரின் பொறுப்பு.

இதைச் செய்ய மறுத்து, மத்திய சர்க்காருக்கு ஏதோ யோசனை கூறியிருப்பதாகக் கூறுவதெல்லாம் வெறும் செப்படி வித்தை; கண்துடைப்பாகும்.

மத்திய சர்க்கார் இப்படிப்பட்ட யோசனையை ஏற்றுக் கொள்ளுமோ சந்தேகம். அது முடிவு செய்யும்வரையில், தமிழ்நாட்டுக் கைத்தறிக்காரர் குடும்பங்கள் சாவதா?

சந்திரநாகூர் நகர சபையைக் கலைத்தது

தற்காலிக ஏற்பாடாம்!

புதுடில்லி, ஜூலை 21— சந்திரநாகூர் நகர சபையை [illegible] தோழர் ஏ. கே. கோபாலன் [illegible] பிரதமர் நேரு பதிலளிக்கையில், "சந்திரநாகூரின் எதிர்கால அமைப்புமுறை [illegible] செய்யுமுன், அதன் மக்களைக் கலந்தாலோசிப்போம் [illegible] இந்தியாவுடன் [illegible] ஏற்படுத்தப்படும் [illegible] ஆகவே [illegible] ஏற்பாடு செய்யவேண்டும்" என்றார்.

அவர் மேலும் கூறுகையில், "[illegible] ஆட்சிமுறை [illegible] முடிவு எடுக்கப்பட வேண்டும்" என்றார்.

பம்பாய் நிதி மந்திரியின் வக்கிர புத்தி

பம்பாய், ஜூலை 21— [illegible]

ஏழைகளுக்கு வைத்திய உதவி குதிரைக் கொம்பு தான்

சென்னை, ஜூலை 21— வைத்திய இலாக்கா மானிய விவாதத்தை எதிர்தரப்பின சார்பில் முடித்து பேசுகையில் திரு. விஸ்வநாதன், இந்திய மருத்துவக் கல்லூரியை மூடுவதை எதிர்த்தார். இந்தக் கல்லூரியின் சார்பிலுள்ள ஆஸ்பத்திரியில் ஏராளமாக, வைத்தியத்திற்கு மக்கள் வருவதே இதன் அவசியத்திற்கு போதிய சான்றாகும் என்றார்.

மாகாணத்தில் இன்றுள்ள 38,000 கிராமங்களுக்கு 1200 ஆஸ்பத்திரிகள் போதவே போதாதென்றும், அதிக டாக்டர்களுக்கு குறுகிய காலத்தில் பயிற்சி அளித்து புதிய ஆஸ்பத்திரிகளை திறக்க வேண்டுமென்றும் கோறினார். நர்ஸ்களுக்கும், மற்ற ஆஸ்பத்திரி சிப்பந்திகளுக்கும் போதிய சம்பளம் கொடுக்க வேண்டுமென்றும் இன்று ஆஸ்பத்திரி ஏழை மக்கள் சிகிச்சை பெறுவதற்கு உதவவில்லை என்றும், சகலருக்கும் எவ்வித தங்கு தடையின்றி ஆஸ்பத்திரி வசதி கிடைக்க வேண்டுமென்றார்.

இந்திய மருத்துவ கலாசாலையை மறுபடியும் திறந்து, அதில் படிப்பவர்களுக்கும் மற்ற டாக்டர்களுக்கும் கொடுக்கும் அந்தஸ்தை அளிக்க வேண்டுமென்றும் திரு. விஸ்வநாதம் கோறினார்.

சீக்கிரத்தில் எப்படி டாக்டர்களைத் தயாரிப்பது?

—மந்திரியின் பதில்

வைத்திய உதவி அடிப்படை உரிமை என்று திரு. கே. பி. கோபாலன் கூறினார். உண்மைதான்; இந்த உரிமையை இங்கிலாந்தில் நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளனர். இந்த முறை நம் நாட்டிலும் கொண்டுவர வேண்டுமென்று எதிர்க் கட்சியினர் கேட்பதை நடைமுறைக்கு கொண்டுவர முடியாது" என வைத்திய மந்திரி ஏ. பி. ஷெட்டி விவாதத்திற்கு பதிலளித்தார்.

சர்பளம் கொடுக்கப்படும் 2000 டாக்டர்களும் 1200க்கு மேற்பட்ட வைத்தியசாலைகளும் இருப்பதாகவும் சொல்லி மந்திரி திருப்தி அடைந்தார். தொழிலாளர்களுக்கு வைத்திய உதவி அளிக்கும் புதிய திட்டம் கொண்டுவரப் போவதாகவும், இது அடுத்த வருஷத்திலிருந்து முதலில் கோயம்புத்தூரிலிருந்து ஆரம்பமாகுமென்றும் கூறினார்.

மருந்து வேண்டுமென்று ஜில்லாக்களிலிருந்து வரும் கோரிக்கைகளை சென்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ் சரியாகக் கவனிக்காதது உண்மைதானென்றும், மருந்து ஆயுதங்களை மத்திய சர்க்கார் தயாரித்து விற்பது அதிக லாபம், பயனும் தருமென்றுங் கூறி இந்த முக்கியமான பிரச்சினையை மத்திய சர்க்கார் மேல் போட்டார் மந்திரி.

ஒவ்வொரு ஜில்லாவும் வைத்தியக் கல்லூரி கேட்பதை ஏற்க மறுத்தார்.

காரணம் மருத்துவக் கல்லூரிகளில் போதுமான அளவு வாத்தியார்கள் வர மறுக்கிறார்களென்றும் காரணம் இந்தக் கல்லூரிகளுக்கு வந்தால் தனியாக சம்பாதிக்க முடியாத நிலைமை இருப்பது தானென்றும் மந்திரி தெரிவித்தார்.

குறைந்த காலத்தில் மருத்துவக் கல்வி அளிக்க ரஷ்யாவில் 3 வருஷத்தில் பயிற்சி செய்யப்பட்டவர்கள் 30,000 ஆஸ்பத்திரிகளை பொறுப்பேற்று நடத்துவதாக மந்திரி ஒப்புக்கொண்டார். ஆனால் நம் நாட்டில் அவ்வித முறையைக் கொண்டுவரக் கூடாதென்று இதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டி கூறிவிட்டதாகச் சொல்லி இந்த முக்கியமான ஆலோசனையை ஏற்க மறுத்தார்.

இந்திய மருத்துவ முறையை ஐரோப்பிய முறையை பூராவாகக் கற்ற பிறகு தான் சாதிக்க முடியுமென்று கூறி இந்திய மருத்துவ கலாசாலையை தொடர்ந்து நடத்த மறுத்தார்.

பல விடங்களுக்கு செல்லும் மொபைல் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்த சர்க்கார் ஆலோசித்துக் கொண்டிருப்பதாக மந்திரிகளின் வழக்கமான பதிலையும் முடிவாக அளித்தார்.

வெடி விபத்தால் 10 பேருக்கு காயம்

அம்பாசமுத்திரம், ஜூலை 21— அம்பாசமுத்திரத்துக்கு அருகாமையிலுள்ள மணிமுத்தாறு அணைக்கட்டு வட்டாரத்திலிருக்கும் ஒரு வெடிமருந்து பாக்டரியில் வெடி விபத்து ஏற்பட்டதின் காரணத்தால் ஆறு பெண்கள் உட்பட்ட 10 பேர் காயமடைந்தனர்.

நாஜி கொலை வெறியருக்கு அமெரிக்க 'கருணை'!

பான், ஜூலை 19— ஹிட்லரின் நாஜி ஜெனரல் ஹான்ஸ் ஜார்ஜ் ரீன்ஹார்ட் என்ற யுத்த குற்றவாளி கருணை காட்டப்பட்டு விடுவிக்கப்படப் போவதாக அமெரிக்க ஹைகமிஷன் இன்று அறிவித்தது.

ரீன்ஹார்ட்டின் 15 வருட தண்டனை 10 வருடம் 9 மாதங்களுக்கு குறைக்கப்பட்டு விட்டது. இவன் நேச நாட்டுக் கைதிகளை, "கடைசி மனிதன் வரை சுட்டுக் கொன்றுவிடும்படி," கட்டளையிட்ட அரக்கனாம்.

எட்வர்ட் ஸ்ட்ராச் என்ற யுத்தக் கைதிக்கு விதிக்கப்பட்டிருந்த மரண தண்டனை, ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளதாம். சட்ட விரோதமாக, இந்த நாஜி எஸ். எஸ். துருப்புக்காரன், படுகொலைகளில் ஈடுபட்டானாம்.

கார்ல் சிக்லிடர், மார்ட்டின் பிரஸே போன்ற குற்றவாளிகளை இன்று அமெரிக்க பிரதம தளபதி விடுவித்து விட்டார்.

கார்ல் சிக்லிடர் கொலை முகாம்களில் நடந்த படுகொலைகளிலீடுபட்டவன். பிரஸே என்பவன், விமானம் சுடப்பட்டபின் பாரசூட்டிலிறங்கிய அமெரிக்க விமானியைத் தாக்கியவன்.

இந்தியாவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் செஸ்டர் பவுல்ஸ், தமது அரசாங்க ஜனநாயகத் தன்மையைப் பற்றி வாய் கிழியப் பேசுகிறாரே, மக்களை ஈவிரக்கமில்லாமல் கொன்று குவித்து மகிழ்ந்த நாஜி அரக்கரை விடுவித்துத், தமது சகாக்களாக்கிக் கொண்டு மூன்றாவது உலக யுத்தத்திற்குத் திட்டமிடுவது தான் அமெரிக்க ஜனநாயகமோ?

போலீஸ் அடாத செயல்

கம்பம், ஜூலை 19— கம்பம் கூடலூர் இடைவழி வழிப்பறி நடந்து வருவதால் பாதுகாப்பிற்கு போலீஸ் பிட் போடப்பட்டுள்ளது. ஆனால் போலீசே வழிப்பறியில் இறங்கியுள்ளது.

16-7-52 இரவு மலைக்கு சந்தை வண்டிகள் கம்பம் கூடலூர் வழியாக வரும்போது சுமார் 9 மணிக்கு போலீசார் வண்டிக்காரர்களை மிரட்டி, கருப்பட்டிக் கொட்டானில் இருந்து ஒவ்வொரு வண்டிக்காரனும் கருப்பட்டி எடுத்து தர வேண்டுமென மிரட்டி அடித்து, பயமுறுத்தி கருப்பட்டியை பறிமுதல் செய்தனர்.

சாமான்களின் சொந்தக்காரர் நிறுத்துப் பார்க்கும்போது குறைந்தால் எங்களின் வாடகையில் ரூபாயை பிடித்துக் கொள்வார்கள் என்று பரிதாபமாக ஒருவர் கூறியதற்கு அவரிடமுள்ள சாட்டையைப் பிடுங்கி அடித்து, 'கொள்ளைக்காரர்கள் கொட்டான் கொண்டானைக் கேட்டால் கொடுப்பீர்கள். நாங்கள் குறைந்த அளவு தானே கேட்கின்றோம் என்று துப்பாக்கியை வைத்துக் கொண்டு மிரட்டி கருப்பட்டியைப் பறித்துச் சென்றனர். எப்படி, ஆச்சாரியார் போலீசின் நடுக்கண்ட நியாயம்?

(ந—நி)

சமாதானமேற்படுமென பணமூட்டைகள் பீதி!

ஆயுத உற்பத்திக்கு தடையேற்பட்டால் "பொருளாதார சீர்குலைவு" ஏற்படுமென்று பிரிட்டிஷ் முதலாளிகள் அலறல்!

லண்டன், ஜூலை 20— "ரஷ்யாவின் சமாதான முயற்சிகள் வெற்றியடைந்தால், மேற்கு வல்லரசுகளின் நாடுகளில் மிகவும் பயங்கரமான பொருளாதாரச் சீர்குலைவு ஏற்படும். இத்தகைய பொருளாதாரச் சீர்குலைவை ஏற்படுத்துவதற்கே சோவியத் ரஷ்யா உண்மையிலேயே "கெடுபிடி" யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம்" என்று மேற்கத்திய ஏகபோக முதலாளிகள் வயிற்றிலடித்துக் கொள்கின்றனர்.

சமீபத்தில் பிரிட்டிஷ் தொழில் முதலாளிகளைப் பிரதிநிதித்வப்படுத்தும் 100 பேரடங்கிய ஒரு மகாநாட்டில் இத்தகைய கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

4 கோடியே 50 லட்சம் பவுன் மூலதனமுடைய பிரிட்டிஷ் கம்பெனிகளின் சேர்மனாகிய எச். டட்ஜோப் ஹியூம் என்பவர் அம் மகாநாட்டில் கூறியதாவது:

"சமாதான ஆபத்து"

"வருகின்ற இரண்டு வருடங்களில் உலக யுத்தம் ஏற்படலாமென்ற நம்பிக்கையிருக்கிறது. "கெடுபிடி" யுத்தம் தொடர்ந்து நடைபெறும் நிலைமையில், ராணுவ தளவாட உற்பத்தியை அதிகரித்துக் கொண்டு போவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

"ஆனால் அதே சமயத்தில் "சமாதான ஆபத்து" ஏற்பட்டுள்ளதையும் நாம் கவனிக்க வேண்டும். 'கெடுபிடி' யுத்தம் முடிவடைந்தால் ஒரு மிகப் பெரிய பொருளாதாரக் குழப்பம் ஏற்படும் அப்பொழுது ரஷ்யர்கள் அதைத் தங்களுக்கு சாதகமாக உபயோகித்துக் கொள்வார்கள்.

'பொருளாதார சீர்குலைவு'

"ஆயுத உற்பத்தி வேலையில் ஈடுபடுத்தியுள்ள தொழிற்சாலைகளெல்லாம், அதை நிறுத்த வேண்டி ஏற்பட்டால் நம்முடைய தேசியப் பொருளாதாரத்துக்கு எவ்வளவு பெரிய நாசமேற்படும்" என்று தன் நடுக்கத்தைத் தெரிவித்தான்.

ஒரு விவாதக் குழுவிற்குத் தலைமைவகித்த சர். ஸெஸில் வெயர் குறிப்பிட்டதாவது:—

வேலையில்லாத் திண்டாட்டம்

ராணுவ தளவாட உற்பத்தியானது நம் வேலையில்லாத் திண்டாட்டத்தை மறைத்துக் கொண்டிருக்கிறது. ரஷ்யர்களின் சமாதான முயற்சி நம் ஆயுத உற்பத்தியின் வேகத்தைத் தடைப்படுத்தும். அதன் மூலம் நம்முடைய பொருளாதாரம் கவிழ்ந்து விழுமென்று அது நம்பிக் கொண்டிருக்கிறது. ஆயுத உற்பத்தி தடைப்படுவதால் ஏற்படும் வேலையில்லாத் திண்டாட்டத்தை சமாளிப்பது கஷ்டம். வீடு கட்டும் தொழில், மராமத்து வேலைகள் இதர மூலதனத் தொழில்கள் ஆகியவற்றில் கொஞ்சம் பேருக்கே வேலை கொடுக்க முடியும்" என்றார்.

வெளி மார்க்கெட்டுகளைப் பற்றிப் பேசும்போது, ஜே. ஏ. எம். பாண்ட் (லண்டன் பிரஸ் எக்ஸ்சேஞ்சு டைரக்டர்) என்பவர், நம் காமன்வெல்த் நாடுகளின் பொருளாதார ஐக்கியத்தை ஏற்படுத்தினாலொழிய நம்மால் நெருக்கடியை சமாளிக்க முடியாது என்றார்.

மக்களின் வாங்கும் சக்தி அதிகரிக்க வேண்டும்

"தொழில் வளர பிரதான தேவை" இந்திய வர்த்தக சங்கத்தலைவர் பிரசங்கம்

கல்கத்தா, ஜூலை 18— "எந்த அளவிற்கு இந்திய மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்திருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் 5 ஆண்டு திட்டத்தின் வெற்றி இருக்கிறது; இது உத்தரவாதமளிக்கப்படவில்லை என்றால் திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச தொழில் வளர்ச்சியை அடைவதில் கூட சங்கடங்கள் ஏற்படும்" என்று இந்திய வர்த்தக சங்கத்தின் முதல் மூன்று மாத பொதுக்குழு கூட்டத்திற்கு தலைமை வகித்த சர். பிஜாய் பிரசாத்சிங்ராய் கூறினார்.

நாட்டில் இப்போதே பொருளாதார மந்தம், உற்பத்திக் குறைவு ஏற்பட்டுள்ளது என்று அவர் கூறினார். உதாரணமாக பஞ்சாலை உற்பத்தி 5 ஆண்டுகளுக்குப் பின்னால் 450 கோடி கெஜம் ஆக வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் இப்போது உற்பத்தியாகும் 410 கோடி கெஜங்களே விற்பனையாவதில்லை. மற்றத் தொழில்களிலும் இந்த நிலைமைதான். இதன் காரணமாக அனேக தொழிற்சாலைகள் உற்பத்தியை குறைக்க வேண்டியது ஏற்பட்டுள்ளது. சில தொழில்களை அடைக்கவும் வேண்டிவந்துள்ளது நம்முடைய பொருளாதார அமைப்பில் உற்பத்திக்கும் உபயோகத்திற்கும் சரியான சமநிலையில்லை. ஆகவே நாட்டின் முன்னுள்ள பிரதான பிரச்னை மக்களிடம் உள்ள வாங்கும் சக்தியை அதிகரிப்பதே. அதற்கு தகுந்தபடி வேலை வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று பிஜாய் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், சர்க்காரின் வரி விகிதம் மக்களின் வாங்கும் சக்தியை குறைப்பதாயிருக்கிறது; ஆகவே அதிக உற்பத்திக்கு தடையாயிருக்கிறது என்றார். இப்போதுள்ள வரி முறை மூலதன வளர்ச்சிக்கும் இடைஞ்சலாயிருக்கிறது என்றார். நாட்டின் உற்பத்தி உயர்வுக்குத் தகுந்தபடி நம்முடைய ஏற்றுமதி அதிகமாக வேண்டும். அப்படியானால் தான் பிரயோஜனம் இது சம்பந்தமாகவும் சர்க்கார் ஒரு நிலையான கொள்கையை கடைப்பிடிக்கவில்லை என்று குற்றஞ் சாட்டினார்.

நாட்டின் தொழிலைப் பாதுகாக்க வேண்டுமானால், நாட்டில் நியாயமான விலையில் போதுமான அளவில் உற்பத்தியாகும் பொருள்களை அன்னிய நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய உத்தரவளிக்கக்கூடாது. ஏற்றுமதிக்கு அதிக வரி விதிப்பதானது ஏற்றுமதியை பாதிக்கிறதென்றும், நம்முடைய பொருள்கள் போன சந்தைகளை மற்றவர்கள் பிடித்துக் கொள்ள வழி யேற்படுகிறது என்றும் தெளிவுபடுத்தினர்.

அசெம்பிளி விவாதம் .....

(முதல்பக்கத் தொடர்ச்சி)

கண்ணாஸ்பத்திரி விஸ்தரிப்பு

கண்ணாஸ்பத்திரியில் பல வியாதஸ்தர்களை தரையில் போடப்பட்டிருப்பதைத் தவிர்க்க வழி என்ன என்று தோழர் கே. பி. கோபாலன் கேட்டதற்கு சுகாதார மந்திரி ஏ.பி.ஷெட்டி அந்த ஆஸ்பத்திரியை அபிவிருத்தி செய்ய யோசித்துக் கொண்டிருப்பதாகவும், அதன் பக்கத்திலுள்ள ஒரு பங்களாவை எடுத்து இன்னும் 100 படுக்கைகளுக்கு வசதி செய்வதாகவும் கூறினார்.

மற்ற எல்லா ஆஸ்பத்திரிகளிலும் படுக்கைகளை அதிகரிக்கச் சர்க்கார் ஆலோசித்துக் கொண்டிருப்பதாக மேலும் கேட்ட கேள்விகளுக்குப் மாமூலான பதிலளித்தார்.

சிறு துறை முகங்கள்

சென்னை ராஜ்யத்தில் பல சிறு துறைமுகங்களை அமைப்பது பற்றிய மத்திய சர்க்காரின் ரிபோர்டு கிடைத்ததென்றும், அதை சென்னை சர்க்கார் பரிசிலனை செய்து கொண்டிருப்பதாகவும் மராமத்து இலாக்கா மந்திரி ஒரு கேள்விக்குப் பதிலளித்தார்.

புறம்போக்கு நிலத்தில் குடியிருப்பு மனை

விவசாயத் தொழிலாளர்களுக்கு புறம்போக்கு நிலத்தில் குடியிருப்பு மனை கொடுக்க சர்க்கார் திட்டமிட்டுள்ளதை நிறுத்திவிட்டனரா என்று திரு. கே. ஆர். சுப்பையம் கேட்டதற்கு இல்லை என்று மந்திரி பதிலளித்தார்.

ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு மனை கொடுப்பதை சர்க்கார் நிறுத்தி விட்டதா, இன்று கட்டியுள்ள குடிசைகளை பிய்த்து எறிய சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறதா என்று சாமி சகஜானந்தா கேட்டதற்கு அவ்விதம் ஹரிஜனங்களை விரட்டக் கூடாது என்று உத்தரவிட்டிருப்பதாக மந்திரி பதிலளித்தார்.

விவசாயத் தொழிலாளர்களாக உள்ள மற்ற பிற்பட்ட ஜாதியினருக்கும் இந்த உத்தரவு செல்லுமா என்று கேட்டதற்கு சகலருக்கும் இந்த உத்தரவு பொருந்தும் என்று கூறினார்.

புறம்போக்கு நிலத்திலுள்ள குடியிருப்பு மனைகளை பிரித்து கொண்டுபோக எங்காவது உத்தரவிட்டிருந்தால் அதை தனக்குத் தெரிவித்தால் கவனிப்பதாகத் மந்திரி பதிலளித்தார்.

பிரதேச ஜெயில்களுக்கு கைதிகளை மாற்றுதல்

தோழர் வெங்கடேஸ்வரலு கேட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் ஜெயில் மந்திரி குட்டிக் கிருஷ்ண நாயர், தண்டிக்கப்பட்ட கைதிகளின் பிரதேசங்களின் ஜெயில்களுக்கு அவர்களை சீக்கிரமே மாற்ற ஆலோசனை செய்து [illegible] ருப்பதாகவும் சீக்கிரம் இது பற்றி முடிவெடுத்து நடைமுறைக்குக் கொண்டு வரப்போவதாகவும் மந்திரி பதிலளித்தார்.

நாகலக்குண்டா சம்பவம்

1-2-51ல் 275 பேர்கள் ஆயுதந் தரித்து, காக்கி உடையில் அந்த கிராமத்தைத் தாக்கி கிராம மக்களைக் கொள்ளையடித்ததாகவும் அதில் ஒருவர் காயத்தால் இறந்ததாகவும், இந்த சம்பவம் [illegible] 2½ மணி நேரத்திற்கு [illegible] பிறகுதான் போலீஸ் வந்ததாகவும், இதில் போலீஸ் நடத்[illegible]யைப் பற்றி பல குறைகள் பொது மக்களால் கூறப்பட்டதாகவும், இதில் சம்பந்தப்பட்ட எல்லா போலீஸ் ஆபீசர்களையும் இலாகா ஒழுங்கு நடவடிக்கை [illegible] விசாரித்து வருவதாகவும், [illegible] முடிந்த [illegible] களுக்கு [illegible] அளிப்பது [illegible] யோசிக்[illegible] மந்திரி பதிலளிக்[illegible]

அமெரிக்காவில் "ஜனநாயக"க் கட்சியில் தேர்தல் குழப்பம்

சிகாகோ, ஜூலை 20— அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு ட்ருமனின் "ஜனநாயக"க் கட்சியின் சார்பில் அபேட்சகரைத் தேர்ந்தெடுப்பதற்காக, சிகாகோவில் இன்று 'ஜனநாயக'க் கட்சியின் கன்வென்ஷன் ஆரம்பமாயிற்று.

அமெரிக்கா பூராவிலுமிருந்து 1574 பிரதிநிதிகளும், அதற்கு மாற்றுப் பிரதிநிதிகளும் குழுமியிருந்தனர்.

மகாநாட்டில் ஒரே குழப்பமும் மனஸ்தாபங்களும் நிறைந்திருந்தன என்று பி.டி.ஐ. விசேஷ நிருபர் தெரிவிக்கிறார்,

"ஆனால் இறுதியில் இது திட்டமிட்ட குழப்பமாகவே முடியும். கடைசியில் சரியான தருணத்தில் ட்ருமனே கட்சித் தலைவராக முன்வந்து விடுவார்" என்று குடியரசுக் கட்சி வட்டாரங்கள் கூறுகின்றன.

பல அபேட்சகர்கள் அபேட்சா பத்திரங்களை தாக்கல் செய்துள்ளனர். யாருக்கும் தான் ஆதரவளிப்பதாகக் குற்றச் சாட்டு வரக்கூடாதென்பதற்காக, மகாநாட்டில் அபேட்சகர் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் தான் சிகாகோவிலேயே இருப்[illegible] என்று ட்ருமன் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

வாஷிங்டனிலேயே இருந்து கொண்டு, டெலிவிஷன் மூலமாக சிகாகோவில் நடப்பவைகளை யெல்லாம் ட்ருமன் கவனித்துக் கொண்டிருப்பாராம். அதிக ஆதரவில்லாத அபேட்சகரெல்லாம் தோல்வியடைந்தபின், தனக்குப் பிடித்தமான அபேட்சகரை ட்ருமன் ஆதரிக்கலாம் என்று கூறப்படுகிறது.

மதுவிலக்குக்கு மாத்து!

நகரில் எஸன்ஸ் வகைகள் விற்கும் குறிப்பிட்ட சில கடைகளில் சர்க்கார் 1952 வருஷம் ஏப்ரல் மாதத்தில் டி எஸென்ஸ் வகைகள் மட்டும் எவ்வளவு விற்பனையாகியுள்ளது என விபரம் கேட்டிருந்தார்கள். இதற்கு கடைக்காரர்கள் தங்கள், தங்கள் கடைகளில் அந்த மாத விற்பனையை அறிவித்துள்ளார்கள் இதன்படி எஸன்ஸ் வகைகள் மட்டும் (மற்ற போன்ற வகைகள் சுமார் 20[illegible] [illegible]மல் (320[illegible] அவுன்ஸ்) பனையாகியு[illegible] இறது [illegible] மருந்து [illegible] தான் [illegible] மற்று [illegible] கடைத்[illegible] சேர[illegible]

சம்பளம் அதிகம் தர சர்க்காரிடம் பணமில்லையாம்!

கொல்லம், ஜூலை 20— "கெஜட் பதிவில்லாத சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு மத்திய சம்பளக் கமிஷன் சிபார்சுகளின்படி அதிக சம்பளம் கொடுக்க சர்க்காரிடம் பணமில்லை" என என். ஜி. ஓ.க்கள் மகாநாட்டில் திரு-கொச்சி நிதி மந்திரி திரு. கோவிந்த மேனன் பேசுகையில் குறிப்பிட்டார்.

"அதிக சம்பளம் கொடுக்க ராஜ்ய சர்க்கார்களிடம் போதிய நிதி இல்லாவிடில், மத்திய சர்க்காரிடமிருந்து பண உதவி கோர வேண்டுமென்று" சென்னை என். ஜி. ஓ. சங்கத் தலைவர் திரு. கண்ணன் குட்டி நாயர் பேசுகையில் அறிவித்தார்.

பெப்சு காங்கிரஸில் அடிதடி

பாடியாலா, ஜூலை 20— பெப்சு காங்கிரஸ் ஊழியர் மகாநாட்டில் இன்று மாலை ரகளையும், கைகலப்பும் ஏற்பட்டது. பஞ்சாபுடன் பெப்சுவையும் ஒன்றாக இணைத்துவிட வேண்டுமென்ற தீர்மானத்தை காங்கிரஸ் ஊழியர் ஒருவர், தலைமையின் அனுமதியின்றி மகாநாட்டில் கொண்டு வந்தார்.

பெப்சு ராஜ்ய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் இத்தீர்மானத்தை நிராகரித்தார். உடனே மகாநாட்டில் கூச்சலும், ரகளையும் கிளம்பி கூட்டத்தில் கலவரம் ஏற்பட்டது.

(முதற் பக்கத் தொடர்ச்சி)

மெண்டில் கொண்டுவர முஸாதேக்கின் கட்சியினர் முடிவு செய்துள்ளனர். பொது மக்களை அபிப்ராயத்தை இந்த தீர்மானத்திற்கு ஆதரவாகத் திரட்ட, அதைப் பல்லாயிரக் கணக்கில் அச்சிட்டு அனைவருக்கும் விநியோகிக்கவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

மீண்டும் பொறுப்பேற்கத் தயார்

தான் மீண்டும் பொறுப்பேற்கத் தயாராக இருப்பதாக மாஜிப் பிரதமர் மொஸ்ஸாதேக இன்று அறிவித்தார்.

மொஸ்ஸாதேக் மீண்டும் அதிகாரப் பொறுப்பேற்க வேண்டுமெனக் கோரி பெர்சியா பூராவும் ஆர்ப்பாட்டங்களும், கிளர்ச்சிகளும் நடைபெறுவதாக டெஹ்ரானுக்கு செய்திகள் கிடைத்துள்ளன. டெஹ்ரானின் சுற்றுப்புறங்களிலிருந்து ஏராளமான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ய நகரை நோக்கி லாரிகளில் வந்து கொண்டிருக்கிறார்கள்.

இன்று ஹர்த்தால் நாளை ஆர்ப்பாட்டம்

இன்று தேசம் பூராவும் பரிபூரண ஹர்த்தால் செய்யும்படியும், சகல தொழிற்சாலைகளையும், வர்த்தக நிலயங்களையும் மூடும்படியும் முஸ்ஸாதேக்கின் தேசிய முன்னணிக் கட்சி அழைப்புவிடுத்துள்ளது.

இன்றைய ஹர்த்தாலைத் தொடர்ந்து நாளை (செவ்வாய்க் கிழமை) மாலையில் ஆர்ப்பாட்டங்களும், கூட்டங்களும் நடத்தும்படியும் அது வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆங்கிலோ அமெரிக்க ஏகாதிபத்யவாதிகளும், ஈரானிய மன்னரும் கூடிக் குலாவி ஏராளமான புரட்சி நடத்தி ஒரு ஏகாதிபத்ய தாசனை பிரதமராக்க சதி செய்துள்ளது மக்களின் எதிர்ப்பை பலப்படுத்தி விட்டது.

பருத்திக்கு நியாயமான விலை நிர்ணயம் தேவை!

வெள்ளைக் கம்பெனியின் ஏகபோகம் ஒழிக!

விருதுநகர், ஜூலை 18— ஜூலை 17ந் தேதி இரவு 7½ மணிக்கு விருதுநகர் அம்மன் கோவில் மைதானத்தில் திரு ஜான் மதுரநாயகம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுக் காரியதரிசி தோழர் பி. சீனிவாச ராவ் பேசுகையில், ராஜாஜி சர்க்காரின் புதிய வரிகளைக் கண்டித்துப் பேசினார்.

அடுத்து தோழர் உ. மாலட்டோவ பேசுகையில், "விருதுநகரில் தண்ணீர்கஷ்டம் தாங்க முடியாத நிலையிலிருக்கும் பொழுது, நகர சபையார் அதற்கு ஒன்றும் வழி செய்யாமல் அசிரத்தையாய் இருப்பதைக் கண்டித்தார்.

இறுதியில் திருச்சி, ராமநாதபுரம், நெல்லை போன்ற ஜில்லாக்களை சர்க்கார் உடனடியாக வாபஸ் வாங்க வேண்டுமென்றும்,

புதிய வரி விதிப்புகளைக் கண்டித்தும், தடுப்புக் காவல் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

"இந்திய சர்க்காரின் வர்த்தகக் கொள்கையால் அமெரிக்கப் பஞ்சுக்கு அதிக விலை கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்தியப் பஞ்சுக்கு உற்பத்தி செலவுக்கும் குறைவாக விலை நிர்ணயிக்கப் படுகிறது. இதனால் பருத்தி பயிரிடும் விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள். மேலும் பருத்தி கொள்முதல் செய்யும் பொறுப்பு ஹார்வி போன்ற வெள்ளை முதலாளிகளின் கையில் ஏகபோகமாக விடப்பட்டுள்ளது. இதனால் நம் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

ஆகவே உடனடியாக சர்க்கார் நம் விவசாயிகளின் பருத்திக்கு நியாயமான விலையை நிர்ணயித்து, அவர்களே நேரடியாகக் கொள் முதல் செய்ய வேண்டும் என்ற மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. (ந.—நி.)

சங்கங்களைக் கலைக்கும்படி மிராசுதாரர்கள் பயமுறுத்தல்

நிலத்தை விட்டு வெளியேற்றுவது நீடிக்கிறது!

சீர்காழி தாலுக்காவில் நடைபெறும் அட்டகாசம்

பணியமாட்டோம் என்று விவசாயிகள் உறுதி

(விசேஷ நிருபர்) சீர்காழி, ஜூலை 18—

விவசாய சங்கங்களை கலைத்து விடவேண்டும்; காங்கிரஸ் சங்கம் அமைக்க வேண்டும்; அதுவும் 1947-க்கு முன்னுலிருந்த கூலி, களவடி, வாரம் தான் கொடுக்க முடியும், இதற்கு உடன்பட்டு கண்டிப்பான முச்சிலிக்கைகள் எழுதிக் கொடுக்க வேண்டும் என மிராசுதார்கள் கூறுகிறார்கள். மேலும், அறுவடைக் காலத்தில் சங்கம் அமைத்து அதிகாரிகளுக்கு மஜுர் எழுதிய காரணத்திற்காக ரூ. 100-ம், ரூ 50-ம் அபராதம் கட்டவேண்டும் என்றும், விவசாய சங்கத் தலைவர்களான தோழர்கள் [illegible] முதலியோர் ஊருக்குள் வரவிடாமல் தடுக்க வேண்டுமென்றும், வெளியூரிலிருந்து எத்தனை ஆட்களைக் கொண்டு வந்தாலும் எதுவும் பேசக்கூடாதென்றும் மிராசுதார்கள் பயமுறுத்துகின்றனர்.

[illegible]

விவசாயிகள் மிராசுதார்களிடம் திட்டவட்டமாகக் கூறி விட்டனர்.

சீர்காழி தாலுக்காவில் நிலவும் இந்த நிலைமைக்குக் காரணங்களென்ன?

அறுவடை காலத்தில் கண்டுமுதல் அளவு செய்யும் போது சர்க்கார் முத்திரை சரியான மரக்கால் கொண்டு தான் அளக்க வேண்டும். 1947ல் விவசாயிகள் மிராசுதார்கள் மாயவரம் ரெவினியூ டிவிஷனல் ஆபீஸர் மூன்று பேர்களும் கூடி செய்து கொண்ட ஒப்பந்தப்படி கண்டு முதலாகும் நெல் கலம் ஒன்றுக்கு ஒரு மரக்கால் களவடியும், மீதமுள்ள நெல்லுக்கு முப்பது சதவிகித வாரம் விவசாயிகளுக்கு கிடைக்கவேண்டும் என்பது தான் அறுவடைக்காலத்தின் கோரிக்கை. இதையும் முத்திரை மரக்கால் அளவு, ஒப்பந்தம் இவைகள் யாவும் மிராசுதார்களின் காதில் ஏறவில்லை.

விவசாயிகள் நியாயம் கிடைக்க கிசான் தாசில்தார், மாயூரம் ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்களுக்கும், இன்னும் ஜில்லா அதிகாரிகளுக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் விண்ணபித்துகொண்டார்கள் அதன்பேரில் கிசான் தாசில்தார் சில இடங்களில்தான் மிராசுதார்களை சமரசத்திற்கு கொண்டு வந்தார். சமரசத்திற்கு வரமுடியாது எனக் கூறி மறுத்துவிட்ட மிராசுதார்கள் பலர் இருக்கிறார்கள்.

1. சீர்காழி எஸ். சதாசிவ முதலியார்—மிராசுதார்—இவருக்கு சொந்தமான கிராமங்களான அரசூர், செமவேலங்குடி இரண்டு ஊர்களிலும் மிராசுதாருக்கு சேரவேண்டிய நெல்லை எல்லாம் எடுத்துக் கொண்டு போய், விவசாயிகளுக்குச் சேரவேண்டிய வாரம், களவடி கொடுக்காமல் இன்னும் வாரம் கொடுக்கப்பட வேண்டிய நெல் களத்திலே கிடக்கிறதாம். மிராசுதார் காரியக்காரர்கள், விவசாயிகளைப் போர் அடிக்கச் சொல்லி அனுமதி தந்துவிட்டு, பிறகு விவசாயிகள் மீது சிவில் கோர்ட்டில், தப்பான கேஸ்கள் போட்டு 40 பேர்கள்வரை இழுத்தடித்து வருவதாக கூறப்படுகிறது.

2. சீர்காழி எஸ். சுப்பராய முதலியார்—மிராசுதார். இவருக்கு சொந்த கிராமங்கள் அரசால மங்கலம், மத்தனை மடையான். இந்த இரண்டு கிராமங்களிலும், முன்னர் குறிப்பிட்ட நிலைமைதானிருக்கிறது. வாரம் கொடுக்கப்படவில்லை.

3. சீர்காழி தென்பாதி டி. டி. திருவேங்கிடம் பிள்ளை மிராசுதார் சொந்த கிராமங்கள்: 1. திருநீலகண்டம் 2. பண்ணை கிராமம், 3. பெரிய குப்பம், 4. மாதானம்வடபாதி, 5. சுட்டமருயபுரம் இந்த கிராமங்களிலும், இன்னும் வாரம் கொடுடாமல் வாரம் கொடுக்கப்படவேண்டிய நெல் களத்தில் கிடந்து மக்கிக்கொண்டிருக்கிறதாம். விவசாயிகள் பட்டினி, பசியால் கஷ்டமடைகிறார்கள். நிலைமை இவ்வாறிருக்க சட்டசபையில் கேள்விகளுக்கு பதில் கூறுகையில், ரெவின்யூ மந்திரி, மாணிக்கவேல் நாயக்கர், ஜில்லா [illegible] அதிகாரிகளால் கிராமங்களில் வார, குத்தகைத் தகராறுகள் எல்லாம் தீர்த்து வைக்கப்

[illegible]

உண்மை.

மேற்கண்ட மிராசுதார்கள், விவசாயிகளுக்கு நிலம் கொடுக்க முடியாது என்று கண்டிப்பாக சொல்வதுடன், வாரம், சாகுபடி செய்து வந்த விவசாயிகளையும், பண்ணையாளாக வேலை செய்தவர்களையும் அனருடை கூலி வேலை செய்ய வேண்டுமென்றும் அதற்கும், மிராசுதார் இஷ்டப்பட்ட ஆட்களைத்தான் வைத்து வேலை செய்வோம் என்றும் கூலி பணரூபத்தில் தான் கொடுக்க முடியுமென்றும் சொல்லியதுடன், வெளியூர் ஆட்களையும் கிராமங்களில் கொண்டு குடிஏற்றி வருகிறார்களாம்.

[illegible] கள் ஏராளமாகக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் உள்ளூர் விவசாயிகளை அடித்துத் துன்புறுத்துகிறார்கள். அவ்வாறு அடிபட்டு காயங்களுடன் வரும் விவசாயிகளுக்குக் கிராம அதிகாரிகள் யதாஸ்து கூட கொடுக்க மறுக்கிறார்கள். "கொந்தளித்துக்கொண்டிருக்கும் இந் நிலைமையை சீர்ப்படுத்த உடனடியாக விவசாயிகள், மிராசுதார்கள், சர்க்கார் பிரதிநிதிகள் அடங்கிய முக்கூட்டு மகாநாடு உடனே கூட்டவேண்டும். எல்லா பிரச்னைகளையும் உடனடியாக கவனிக்க வேண்டும்" என விவசாய சங்கங்கள் கோருகின்றன.

தமிழ் ராஜ்யம் உடனே வேண்டும்

தமிழக தமிழர் மகாநாட்டின் கோரிக்கை

புது வரி விதிப்பதற்கு கண்டனம்

சென்னை, ஜூலை 20—

"மக்களின் வாங்கும் சக்தி மிகவும் குறைந்துள்ள இந்த சமயத்தில் சென்னை சர்க்கார் புதுவரிகள் விதிக்க முற்பட்டிருப்பது மிகவும் அநியாயம் என்றும், புதிய வரிகள் விதிப்பதற்கு பதிலாக மத்திய சர்க்காரிடமிருந்து மான்யம் கோரிப்பெறவேண்டுமென்றும்" இன்று மாலை நடைபெற்ற தமிழக தமிழர் மகாநாட்டிற்கு தலைமை வகித்துப் பேசுகையில் திரு. வி. வி. ராமசாமி குறிப்பிட்டார்.

திரு. டி. எஸ். மணி பிரார்த்தனை கீதம்பாடிய பின், திரு. என். எஸ். கிருஷ்ணன் தமிழ்க் கொடியை ஏற்றி வைத்தார். "தொன்மையான தங்கள் கலாச்சாரத்தைப் பரப்ப தமிழ் மக்கள் முன்வர வேண்டும். இதற்கு நாடகக் கலையை அபிவிருத்தி செய்ய வேண்டியது மிகவும் முக்கியம். ஆனால் அரசாங்கம் இதைக் கொஞ்சமும் மதிக்காமலிருப்பது கண்டிக்கத் தக்கது என அவர் கூறினார்.

மகாநாட்டைத் திறந்து வைத்து திரு. கே. விநாயகம், எம்.எல்.ஏ. பேசுகையில், சென்னை நகரம் தமிழ் நாட்டைத்தான் சேர்ந்ததென்றும், சித்தூர் ஜில்லாவையும் [illegible]

[illegible] பாஷையாக வேண்டுமென வற்புறுத்தியும், ரயில் நிலையங்களிலும், இதர பொது இடங்களிலும், ஹிந்தியில் பெயர்கள் எழுதுவதைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

கடல் கடந்த தமிழர்களின் உரிமைப் போராட்டத்திற்கு மகாநாடு ஆதரவும், அனுதாபமும் தெரிவித்தது.

கோவில் [illegible] சொத்துக்கள்

[illegible]

[illegible] எஸ். ராமநாதன், தெய்வசிகாமணி முதலியோர்களும், பன்மொழிப்புலவர் அப்பாதுரை, திராவிடன் ஆசிரியர் தோழர் நடராசன், திரு. சாமி சிதம்பரனார், தோழர் கே. டி ராஜு [illegible] எம் எல்.ஏ. முதலியோர்களும் பேசினர்.

தீர்மானங்கள்

பிரெஞ்சு பிரதேசமும் உள்ளிட்ட தென் குமரியிலிருந்து திருப்பதிவரை உள்ள பிரதேசத்தை தனித் தமிழ் மாகாணமாக்க வேண்டுமென்றும், இதற்கு தலை நகரம் சென்னையிலிருக்க வேண்டுமென்றும், மகாநாடு தீர்மானித்தது. தமிழ் மொழி ராஜ்ய [illegible]

பம்பாய் துறைமுக தொழிலாளர் வெற்றி

பம்பாய், ஜூலை 19—

5000 பேர்கள் கொண்ட சோஷியலிஸ்டு தலைமையிலுள்ள பம்பாய் துறைமுகத் தொழிலாளர் நிர்வாகத்திற்கும் துறைமுக சங்கத்திற்கும் கடந்த 4½ மாத காலமாக நீடித்து வந்த தகராறில் இன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. மத்திய சமரச அதிகாரி சர்க்கார் சார்பில் கலந்துகொண்டார்.

½ மணி நேரம் முன்பு வேலைக்கு வரவேண்டுமானால் தினசரி 4 அணா அதிக சம்பளம் கொடுக்கவேண்டுமென்று கோரி தொழிலாளிகள் தினசரி ½ மணிநேரம் தாமதித்து வந்து கொண்டிருந்தார்கள். துறைமுக நிர்வாகத்தினர் தொழிலாளிகளின் கோரிக்கைகளை ஏற்க மறுத்து தினசரி 4 அணா குறைத்துவந்தனர். ஒப்பந்தத்தின்படி துறைமுக நிர்வாகம் தொழிலாளிகளுக்கு குறைத்த சம்பளத்தை கொடுக்க இசைந்தது.

மேலும் சம்பளம், வேலை நேரம் பற்றி விசாரணைக் கோர்ட் ஏற்படுத்தப்படுவதற்கும் ஒப்புக்கொண்டுள்ளது.

குடிதண்ணீர் பிரச்னையை சமாளித்தால் பஞ்சத்தை ஒழித்துவிடலாம்

மந்திரி கித்வாய் கருத்து

சித்தூர், ஜூலை, 21—

"குடிதண்ணீர் பிரச்னைக்கு ஒரு பரிகாரம் தேடிவிட்டால ராயலசீமாவில் பஞ்சத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தில் நாம் ஜெயித்தவர்களாவோம்" என்று மத்ய சர்க்கார் உணவு மந்திரி கித்வாய் நேற்று சித்தூரில் பத்திரிகை நிருபர்களிடம் கூறினர்.

சர்க்காரின் நடவடிக்கைகளுக்கு மக்கள் ஒன்றுபட்ட முறையிலும், உறுதியாகவும் ஆதரவளித்தார்களானால், பஞ்சத்தை விரைவில் போக்கிவிடலாம் என்று மேலும் கூறினர்.

பஞ்சங்களை நிரந்தரமாகத் தடுக்க என்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் மென்பதுபற்றி, தான மத்ய சர்க்காரிடம் விவாதிக்கப் போவதாகவும் மந்திரி கித்வாய் கூறினர்.

மந்திரி கித்வாய் கஞ்சித் தொட்டி நடைபெறும் ஒரு இடத்திற்குச் சென்றபோது, இன்னும் கஞ்சித் தொட்டிகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும்மென்று கிராமவாசிகள் அவரிடம் விண்ணப்பித்துக்கொண்டனர்.

ரெட்டிகுண்டாவிற்கு மந்திரி சென்றபோது, கஞ்சி மிகவும் தண்ணீராயிருக்கிறதென்றும், ஆகவே அதற்கு பதிலாக ராகி களி கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் பஞ்சத்திலடிபட்ட கிராமவாசிகள் கூறினர்.

உருக்குத் தொழிலாளர் ஸ்ட்ரைக் நீடிக்கிறது

பிட்ஸ்பர்க், ஜூலை 20—

6,50,000 அங்கத்தினர்களைக் கொண்ட உருக்குத் தொழிலாளர் யூனியன் தலைவர் திரு பிலிப் முர்ரேக்கும் உருக்கு முதலாளிகளுக்கும், 49 நாட்களாக நடந்துவரும் ஸ்ட்ரைக்கை முடிப்பதற்காக நடந்த பேச்சு வார்த்தைகள் முறிந்துவிட்டன.

"நாங்கள் சந்தித்தோம் என்பதைத் தவிர கூறுவதற்கு வேறொன்றுமில்லை," என்று முர்ரே கூறினர்.

சர்க்கரைத் தொழிலில் பெரும் நெருக்கடி

கரும்பு உற்பத்தியாளர் மகாநாட்டு நடவடிக்கை

சகல உதவியும் செய்துள்ளதாக மந்திரி அளப்பு

சென்னை, ஜூலை 20—

[illegible]

தொழிற்சாலை திடீரென்று மூடப்பட்டதற்கு யந்திரக் கோளாறுதான் காரணம் [illegible]

[illegible] வாங்கி கரும்பை அரைக்காததால் கரும்பு உற்பத்தியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை தொழிற்சாலைகள் கொடுக்கும்படி சர்க்கார் நிர்பந்திக்கவேண்டும். வருகிற 1952-53ல் கரும்புப் பயிரின் விலையை முன்கூட்டியே நிர்ணயிக்க வேண்டும். கரும்பு விலையை சர்க்கரை விலைக்குத் தகுந்தபடி நிர்ணயிக்காமல் உற்பத்திச் செலவும், அதற்கு மேல் 10 சதம் லாபமும் வைத்து நிர்ணயிக்கவேண்டும். இந்த யோசனையை காப்புவரி போர்டே ஒப்புக்கொண்டுள்ளது. மேலும் உற்பத்தியாளர்கள் கடன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றார்.

சென்னை ராஜ்ய விவசாய மந்திரி டாக்டர் ஆர். நாகன கௌட் பேசுகையில், "இந்தியாவில் 35 லட்சம் ஏக்கர்களில் கரும்பு பயிரிடப் படுகிறது. சென்னை ராஜ்யத்தில் இப்போது 2லக்ஷம் ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது. சுமார் 20 வருடங்களுக்கும் முன்பு அது ஒரு லக்ஷமாக இருந்தது. இங்கு இப்போது ஒரு ஏக்கருக்கு சராசரி 27 டன் கரும்பு உற்பத்தியாகிறது. இந்தியா பூராவும் சராசரி 14 டன் உற்பத்தியாகிறது. கஷ்டமின்றி ஒருஏக்கரின் உற்பத்தியை 50 டன்னுக அதிகரிக்க முடியுமென்றார்.

உற்பத்தியை பெருக்க வேண்டுமென்று சொன்ன அதே வாயினால் மந்திரி இன்று கரும்புத் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குக் காரணம் 1951-52ல் கரும்பு [illegible] மென்று அவர் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக உற்பத்தியாளர்களை பார்த்து "உற்பத்தி விலையை குறையுங்கள், வெளிநாடுகளுக்கு சர்க்கரையை ஏற்றுமதி செய்ய முயற்சி செய்யுங்கள்" என்று பாரி கம்பெனிக்கு வக்காலத்து வாங்கும் முறையில் பேசினர். சர்க்கார், தொழிற்சாலையின் நலனையும் பாதுகாக்க வேண்டியதிருக்கிறது என்று உற்பத்தியாளர்களை எச்சரித்தார்.

புகளூர் பாரி கம்பெனி [illegible] அதன்காரணமாக வட இந்தியாவில் தொழிற்சாலைகள் சென்ற காலத்தில் 120 ஆக அதிகரித்துள்ள போதிலும் தென்னிந்தியாவில் தொழிற்சாலைகள் அதிகரிக்கவில்லையென்றார்.

ஆகவே அதிக தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படவேண்டுமென்றும், தொழில் முதலாளிகளிடமிருந்து உற்பத்தியாளர்கள் நியாயம் பெற அவர்கள் ஸ்தாபன ரீதியாக திரளவேண்டுமென்றும் கூறினர்.

அமெரிக்க மிருகத்தனம்

ஹாங்காங், ஜூலை 19—

[illegible] ராணுவ நிர்ப்பந்தத்தின் மூலம், பான்முன்ஜாமில் நடக்கும் யுத்த நிறுத்தப் பேச்சு வார்த்தைகளில்) தன்னுடைய நிபந்தனைகளைத் திணிக்க அமெரிக்கா முயல்வதாக நவசீன செய்திஸ்தாபனம் இன்று குற்றம் சாட்டியது.

பயோங்யாங் மீது மிருகத்தனமாக குண்டுவீச்சுக்களை நடத்தியபோது நடந்த ரகசியப் பேச்சுவார்த்தைகளில், அமெரிக்காபோட்ட நிபந்தனைகள் யுத்த நிறுத்தத்திற்கு இரண்டு கட்சிகளும் ஒப்புக்கொள்ளக் கூடியவையாக இருக்கவில்லை என அது மேலும் குறிப்பிட்டது.

கிராமங்களுக்குத் தபாலாபீஸ்கள்

[illegible]

மேதா வியாக்கியானம்

பம்பாய், ஜூலை 19—

சோஷலிஸ்டுக் கட்சி பலாத்காரமாக காங்கிரசை ஒழிக்கப் பார்க்கிறது என்று பம்பாய் முதலமைச்சர் திரு. மொரார்ஜிதேசாய் சட்டசபையில் கூறியுள்ளதைக் கேட்டு ஆச்சரியமும் வருத்தமும் அடைவதாக சோஷலிஸ்ட் தலைவர் அசோக மேதா இன்று கூறினர்.

சோலிஸ்டுக் கட்சி ஜனநாயக ரீதியில் காங்கிரஸ் சர்க்காரை நீக்குவதற்குப் பாடுபடுகிறது. பலாத்காரமாக ஒழிக்கவேண்டுமென்று எனறைக்குமே சோஷலிஸ்ட் கட்சி பிரசாரம் செய்யவில்லை. தைரியமிருந்தால் மொரார்ஜிதேசாய் நிரூபிக்கட்டும் என்று அசோக மேதா சவால் விடுத்தார்.

ஒலிம்பிக் பந்தயங்கள்

ஹாக்கியில் இந்தியா ஜெயித்தது!

ஓட்டப்பந்தயத்தில் செக்கோஸ்லோவாகியரின் பிரமாத வெற்றி!

மேலும் ரஷ்யரின் வெற்றிகள்!

ஹெல்சிங்கி, ஜூலை, 20—

இன்று ஒலிம்பிக் 'செமி-பைனல்' ஹாக்கி பந்தயத்தில் 3 கோல்கள் போட்டு இந்திய கோஷ்டி பிரமாத வெற்றியடைந்தது. ஒரு கோல் மட்டுமே போட்டு பிரிட்டிஷ் கோஷ்டி தோல்வியடைந்தது. இந்திய கோஷ்டியில் பல்பீர் சிங்கின் ஆட்டம் அபாரமாக இருந்தது.

இரண்டாவது 'செமி-பைனல்' ஹாக்கி ஆட்டத்தில் ஒரே ஒரு கோல் போட்டு ஹாலந்து கோஷ்டி ஜெயித்தது. பாகிஸ்தான் கோஷ்டி ஒரு கோலும் போடாமல் தோற்றது.

சாக்கர் கால்பந்து ஆட்டத்தில் ரஷ்ய கோஷ்டியும், யூகோஸ்லோவிய கோஷ்டியும் இரண்டும் ஐந்து, ஐந்து கோல்கள் போட்டு ஆட்டம் 'ட்ரா' ஆய்விட்டது.

மற்றிரு ஆட்டங்களில் ஜெர்மனியும, பிரேஜிலும் ஜெயித்தன, எகிப்தும், லக்ஸம்பார்க்கும் தோல்வியடைந்தன.

[illegible] வீராங்கனைகள் மைதானத்தில் இறங்கினர்.

கே. என். ரொமாஸ்கோவா 50.84 மீடர் (166 அடி 9-5/8 அங்குல) தூரத்திற்கு இரும்புத் தட்டை வீசி, 1936 பெர்லின் ஒலிம்பிக் பந்தயங்களின் போது வீசப்பட்ட உயர்ந்தபட்ச தூரத்தையும் வென்றார். இதனால் இவ்விளையாட்டில் முதன்மையானவர் என்ற பட்டமும் ரஷ்யாவிற்கு ஒரு தங்கமெடலும் கிடைத்தது.

ஹை-ஜம்ப்

ஹை-ஜம்ப் போட்டியில் 6 அடி 8 3/8 அங்குல உயரத்தைத் தாண்டிய அமெரிக்கர் வால்டர் டேவிஸ் வெற்றி பெற்றார்.

400 [illegible] 'ஹர்டில்' ஓட்டப்பந்தயத்தில் சார்லஸ் மூர் என்ற மற்றொரு அமெரிக்கர் வெற்றிபெற்றார்.

100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் மெசாகரேவ என்ற ரஷ்யர் வெற்றிபெற்றார்.

செக்கோஸ்லோவாக் வெற்றி

எமில்ஜடோபெக் என்ற செக்கோஸ்லோவாக்கியர் 10,000 மீடர் தூரத்தை (சுமார் 6¼ மைல்) 29 நிமிஷம் 17 செகண்டில் ஓடி முடிந்து வெற்றி பெற்றார். இந்த வெற்றி ஸ்டேடியத்தில் கூடியிருந்த 70,000 பேரையும் மயிர்சிலிர்க்க வைத்தது.

கடந்த ஒலிம்பிக் பந்தயங்களின் போது இவரே, இதே தூரத்தை ஓடி முடிக்க 29 நிமிஷம் 59.6 செகண்ட் எடுத்தார்.

ஒரு பிரெஞ்சுக்காரரும், ரஷ்யரும் முறையே 2-வது மூன்றாவது ஸ்தானத்தைப் பெற்றனர்.

சோவியத் வீராங்கனைகள்!

வட்டமான இரும்புத் தட்டுகளை வீசும் பந்தயம் ஆரம்பமாயிற்று. எப்பொழுதும் இதில் முதன்மை ஸ்தானம் பெற்றுவரும் சோவி [illegible]

[illegible] உருக்குத் தொழிலாளர்கள் ஸ்ட்ரைக்

வாஷிங்டன், ஜூலை, 19—

வேலை நிறுத்தம் செய்துள்ள உருக்குத் தொழிலாளிகளும், முதலாளிகளும், 48 நாட்களாக நடந்துவரும் ஸ்ட்ரைக்கை நிறுத்த பிட்ஸ்பர்க்கில் நாளை மறுபடியும் பேச்சுவார்த்தைகள் துவங்குவார்கள்.

6,00,000 உருக்குத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்துள்ளார்கள். [illegible] தவிர, வேறு தொழிற்சா[illegible]களைச் சேர்ந்த 15,00,00[illegible] தொழிலாளிகளும் வே[illegible] செய்து இருக்கிறார்கள்.

டோக்கியோ, ஜூலை, 20—

கப்பல்களிலிருந்து தாக்கு[illegible] அமெரிக்கக் குண்டு வீசு[illegible] விமானங்கள் [illegible] வடகொரிய[illegible]

வாழ்க ஜனசக்தி!

வெங்குவார்பட்டி, ஜூலை 19—

பொய், புளுகு, ஜன விரோதப் போக்கு ஆகியவற்றை சதா கக்கிக் கொண்டிருக்கும் பணக்காரப் பத்திரிகைகளுக்கிடையே வீர நடை போட்டு ஜாம் ஜாம்மென்று மக்கள் பணியாற்ற வந்த ஜனசக்தியே வாழ்க!

புதிய சகாப்தத்தை உருவாக்கவும், நாட்டு மக்கள் நல்வாழ்விற்காகவும், ஐக்கிய ஜனநாயக முன்னணி ஆட்சிக்காகவும் இடையறாது சேவை செய்ய வந்துள்ள ஜனசக்தியை, தாய் சேயைக்காப்பது போல், சகல தமிழ் மக்களும் ஆதரிப்பார்களென்பதில் சந்தேகமில்லை.

எஸ். வி. நாகப்பன் (ஆசிரியர்)

ஆயுத உற்பத்தியைக் குறை!

பிரிட்டிஷ் தொழிற்சங்கங்கள் கிளர்ச்சி

லண்டன், ஜூலை 20—

பிரிட்டனிலுள்ள பல பெரிய தொழிற் சங்கங்களும், பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் ஏராளமான ஸ்தலக் கிளைகளும், பிரிட்டன் தன்னுடைய ராணுவ தளவாட உற்பத்தியைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று ஏராளமான தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பப்பட்டு வருகின்றன.

தொழிற் கட்சியின் 60 லட்ச அங்கத்தினர் தொகையில் மேற் குறிப்பிட்ட தொழிற் சங்கங்கள் 6ல் 5 பங்கு அங்கத்தினர் தொகையைக் கொண்டவை.

3,40,0[illegible] அங்கத்தினர் தொகையுடைய பிரிட்டிஷ் [illegible] தொழிலாளர் சங் [illegible] நிறைவேற்றியுள்ள ஒரு [illegible] கொஞ்சம் [illegible] ஆயுத [illegible] அவசிய [illegible] பிரிட்ட [illegible] ராணுவ [illegible] மிகவும் [illegible] பிரிட் [illegible]

நேபாள காங்கிரஸ் மந்திரிசபை மாறும்?

காட்மண்டு, ஜூலை. 20—

பிரதம மந்திரி எம். பி. கொய்ராலாவுக்கும், நேபாள காங்கிரஸ்கமிட்டிக்கும், மந்திரிகளை நியமிப்பது சம்பந்தமாக தகராறு எழுந்துள்ளது. "உறுதியானதும, ஒருமைப்பாடுள்ளதுமான" அரசாங்கம் வேண்டுமாகையால் தன் விருப்பப்படி தான் மந்திரி சபையை அமைப்பேன் என கிறார் அவர். காங்கிரசால் திணிக்கப்பட்ட மந்திரிகள் அவருக்கு ஒத்துவரவில்லையாம். "நேபாள காங்கிரஸிலுள்ள மிகச்சிறந்த திறமையுள்ளவரைத்தான்" தாங்கள் நியமித்ததாக நேபாளி காங்கிரஸ் கூறுகிறது. காங்கிரஸ் காரியக்கமிட்டி இதுபற்றி இன்று கூடி ஆலோசிக்குமாம், மந்திரி சபையில் மாறுதல் ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமூக அபிவிருத்தித் திட்டத்தின் அலங்கோலம்

எடுத்த எடுப்பிலேயே கோணல்

திருவனந்தபுரம், ஜூலை 19—

அமெரிக்காவின் 'உதவி'யுடன் நடத்தப்படும் சமூக அபிவிருத்தித் திட்டம் எப்படி நடைபெறும் என்பதற்கு திருவாங்கூர் கொச்சியில் இப்போது காங்கிரஸ் சர்க்கார் எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை சிறந்த உதாரணமாகும். அமெரிக்கர்கள் தங்களுக்கு இஷ்டமானபடி இத்திட்டத்தின்பேரால் ஒற்றர்களை இந்தியாவில் குவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது இன்று திரு-கொச்சி சட்டசபையில் நிதர்சனமாயிற்று.

சமூக அபிவிருத்தித் திட்டத்திற்கு உத்தியோகஸ்தர்கள் நியமிக்கும் விஷயத்தில் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் கலக்கப்பட வேண்டியதில்லை, என்று ராஜ பிரமுகர் போட்டுள்ள உத்தரவுபற்றி இன்று திரு-கொச்சி அசெம்பளியில் விவாதம் நடைபெற்றது. இந்த உத்தரவு தங்களிஷ்டம் போல் அமெரிக்க சர்க்காருக்குப் பிரியமானவர்களை அதிகாரிகளாக நியமிக்க காங்கிரஸ் சர்க்காருக்கு அனுமதியளித்திருக்கிறது.

சோஷலிஸ்ட் உறுப்பினர் திரு. நடராஜப்பிள்ளை சர்க்கார் சமூக அபிவிருத்தித் திட்டத்திற்கு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலமாகவே அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும் என்று ஒரு திருத்தப் பிரேரேபணையைக் கொண்டுவந்தார். திருத்தத்திற்கு ஆதரவாக 37 ஓட்டுகளும் எதிராக 52 ஓட்டுகளும் கிடைத்தன. திருத்தம் தோல்வியடைந்தது.

நடராஜபிள்ளை பேசுகையில் "சர்க்கார் அனுஷ்டிக்கும் முறை தவறு. ஜூன் 20 நூற்றுக்கணக்கான பேர்கள் பப்ளிக் சர்விஸ் கமிஷனைக் கலக்கடபடாமல் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்" என்றார். மேலும் பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு அதிகாரமில்லை என்ற உத்தரவு ஜூலை 1-ல் தான் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றார்.

தோழர் அச்சுத மேனன் (கம்யூனிஸ்ட்) பேசுகையில், "நீண்ட காலமாக கடந்த காலத்திலும் தற்போதும் அரசியல், அதிகாரிகளின் நியமனத்தைச் சுற்றி உள்ளது பப்ளிக் சர்விஸ் கமிஷன் நிலைமையை ஓரளவுக்கு சீர்திருத்தியுள்ளது என்றார். அவர் மேலும் பேசுகையில் சமூக அபிவிருத்தித் திட்டத்திற்கு சர்க்

(4ம் பக்கம் பார்க்க)

ஐக்கிய கேரளம் அமைய வேண்டும்

சென்னை மலையாளிகள் கூட்டத்தில் கோரிக்கை

சென்னை, ஜூலை 21—

மொழிவாரி மாகாணப் பிரச்சினையில் இந்திய சர்க்கார் கடைப் பிடிக்கும் கொள்கையைக் கண்டித்து நேற்றுமாலை மெமோரியல் ஹாலில் நடைபெற்ற சென்னை மலையாளிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மலையாள மக்களின் முன்னேற்றத்தையும், நலனையும், கருத்திற்கொண்டு, உடனடியாக ஐக்கிய கேரளம் அமைக்க வேண்டுமென்று இந்திய சர்க்காரை கூட்டம் கேட்டுக் கொண்டது. தோழர் வி. [illegible] மேஸ்வரன் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

திரு-கொச்சி ராஜ்யத்திலும், மலபாரிலுமுள்ள சட்டசபை, பார்லிமெண்ட் அங்கத்தினர்களும், எல்லா அரசியல் கட்சிகள், பொதுஜன ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் உடனடியாக ஒன்றுகூடி ஐக்கிய கேரளம் அடைவதற்கான வழி துறைகளைப் பரிசிலிக்க வேண்டுமென்றும் ஓணம் பண்டிகைக்கு சென்னை நகரில் வேலை செய்யும் மலையாளிகளுக்கு விடுமுறை வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் தோழர் டி. சி. நாராயண நம்பியார், டாக்டர் கிருஷ்ணபிள்ளை, பி. கே. கோபாலகிருஷ்ணன், இ.எம்.எஸ். நம்பூதிரிபாட், ஆர். கிருஷ்ணன், தோழர் நாகிரெட்டி முதலியோர்களும் கலந்து கொண்டனர்.

சென்னை அரசாங்க பஸ் போக்குவரத்து நிலைமை (1)

தெ. மா. தொ. ச. கா. கூட்டுச்செயலாளர்
தோழர் சைமன் பால்

சென்னை, ஜூலை 21

சென்னை அரசாங்கம் 1947 லிருந்து நகரத்திலுள்ள பஸ் போக்குவரத்தை "தேசியமயமாக்குவது" என்ற பேரால் தானே நடத்தி வருகிறது!

மொத்தம் உள்ள பஸ்கள் 354. இவற்றில் 61 பஸ்கள் "வைத்திய சிகிச்சை" பெற்றுக் கொண்டிருக்கின்றன நீண்ட காலமாக. சீக்கிரம் "சுகமடைய வைக்க" ஸ்பேர் பார்ட்ஸ் இல்லையாம்! மேலும் 15 பஸ்கள் தண்ணீர் பம்புகளுக்கு மோட்டார்களாக மாற்றப்பட்டு விட்டன.

லாபக் கொள்ளை

இவையனைத்தும் நீங்கலாக இன்று உபயோகத்திலுள்ள பஸ்கள் 278. இவற்றில் சில பஸ்கள் அவசர அவசியத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. எனவே இன்று சராசரியாக ஓடிக்கொண்டிருக்கும் பஸ்கள் 550 ஆகும். ஒவ்வொரு பஸ்ஸிலும் தினசரி இரண்டு ஷிப்ட்களிலுமாக குறைந்த பட்ச வருமானம் ரூ. 130 முதல் ரூ. 160 எனத் தெரிகிறது. அந்த ரீதியில் வருடமொன்றுக்கு மொத்தம் 1 கோடி 35 லக்ஷம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இதில் நிர்வாகச் செலவு, ஸ்பேர் பார்ட்ஸ், பெட்ரோல் எண்ணெய் முதலியவற்றுக்காக செலவு மூன்றில் இரண்டு பங்கு [illegible] ரூ. 45 லட்சமாகிறது. ஆனால் மந்திரி சபை பஸ் போக்குவரத்தினால் [illegible] 10 லட்சம் [illegible] மந்திரி சபை [illegible] "உண்மையும்" உண்டு. நிர்வாகத்தின் ஊதாரித்தனம்தான் இந்த லாபத்தில் ஏற்பட்ட குறைவுக்குக் காரணம். மந்திரி சபைக்கு இது எப்படித் தெரியும்? இந்த ஊதாரித்தனத்திற்கு சில உதாரணங்களை தருகிறேன்.

(1) பெட்ரோல் கொள்முதல் செய்வது:—மொத்தமாக எந்தக் கம்பெனியிலும் கொள்முதல் செய்தாலும் காலன் 1க்கு விலையில் 2 அணா குறையும். இது வியாபார முறை. ஆனால் டிரான்ஸ்போர்ட் நிர்வாகம் தங்களுக்கு வேண்டிய கம்பெனியிலிருந்து பெட்ரோல் கொள்முதல் செய்கிறது. பாரிஸ் கார்னரிலுள்ள ஒரு தனிப்பட்ட கம்பெனியில் மட்டும் தினம் சராசரி 1000 காலன் பெட்ரோல் அரசாங்க [illegible] முதல் செய்யப்படுகிறது. அதாவது தினம் 1000 இரண்டணாக்கள் சர்க்காருக்கு நஷ்டமாகிறது. அதாவது தினம் ரூ. 120, மாதத்திற்கு ரூ. 3750 நஷ்டமாகிறது. வருடத்திற்கு ரூ. 45000 நஷ்டம். இதை தவிர்த்து அரசாங்கமே நேரடி கொள்முதல் செய்தால் இந்த தொகையை கொண்டு பஸ் கண்டக்டர், டிரைவர், ஷெட் தொழிலாளிகளுக்கு இரண்டு வருடம் இரண்டு ஜதை உடை [illegible]. சென்ற 18 மாதங்களாக கண்டக்டர் டிரைவர்களுக்கு உடை கொடுக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது என்பதை இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது. அதே சமயத்தில் [illegible]

(2) ஸ்பேர் பார்ட்கள்:—[illegible]

[illegible]

கலே கூடுவிட்டுக் கூடு பாய்ந்து செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள ஒழலூர் கிராமத்திலுள்ள ஒருவரிடம் அடைக்கலம் புகுந்து அவை "திரிபுர சுந்தரி" என்ற பஸ் சர்வீஸ் அங்கத்தினர்களாக மாறியுள்ளதாக பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். சென்னைச் சட்டசபையிலும் சில வருடங்களுக்கு முன்பு இதுபற்றி கேள்விகள் எழுந்தும் தக்க பதில் அளிக்கப்படாமல் போனதையும், இங்கு வாசகர்களின் ஞாபகத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். பஸ்கள் இவ்வாறு கூடுவிட்டுக் கூடு பாயும்போது, சிறிய ஸ்பேர் பார்ட்டுகள் அதைப் பின்பற்றுவதில் ஆச்சரியமில்லை! சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், அரசாங்கமும் இதற்கு சமாதானம் கூறவேண்டும். இன்று அரசாங்க பஸ்கள் தெருக்களில் "சத்யாக்ரகம்" செய்து வருவதற்கோ இதர அத்தகைய கோளாறுகளுக்கோ, டிரைவர்களோ, கண்டக்டர்களோ இதர தொழிலாளிகளோ சிறிதளவும் பொறுப்பாளிகளல்ல. நிர்வாகம்தான் இதற்குப் பொறுப்பேற்றாக வேண்டும். (தொடரும்)

காங்கிரசின் புண்ணியத்தாலே வெள்ளையன் கொள்ளை அதிகமாகிறது

வெள்ளை முதலாளியின் மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ் என்கிற மில்லில் நிகர லாபம் 1951-52ம் ஆண்டில் 38 லட்சத்து 15 ஆயிரத்து 974 ரூபாயாகும். இது முந்திய ஆண்டைவிட 15 லட்சம் ரூபாய் அதிகமாகும்.

துணி உற்பத்தி சென்ற ஆண்டைவிட இவ்வாண்டில் அதிகரித்துள்ளது.

"இந்தியன் பைனன்ஸ்" சஞ்சிகை

சம்பளம் கிடைக்க ஏற்பாடு

சேலம், ஜூலை 19—

சேலம் ஜில்லா கலெக்டர் நிர்வாகத்தின்கீழ் வேலை செய்யும் 60 என். ஜி. ஓக்களுக்கு $1\frac{1}{2}$ முதல் $2\frac{1}{2}$ மாதம் வரை சம்பளம் தரப்படவில்லை என ஜனசக்தி 18-7-52 வெளியீடு பதிப்பில் வெளியாகி இருந்தது. ஜனசக்தியில் செய்தி வெளியான அன்றே சம்பளபில் போடப்பட்டு அது சாங்ஷனுக்கு அனுப்பப்பட்டுள்ளதென்றும் இரண்டு மூன்று தினங்களில் அவர்களுக்கு சம்பளம் கிடைக்கும் எனவும் நம்பகமாகத் தெரிகிறது. இவ்வாரம் என். ஜி. ஓக்களுக்கு சம்பளம் கிடைத்துவிட்டால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி குறையும் என எதிர்பார்க்கலாம்.

பட்டினிச் சாவு!

ஆனங்கூர், ஜூலை 17—

ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மருதன் என்பவர் இரண்டு மாத காலமாக வேலையின்றித் துன்பமுற்று 17வ காலை வேர் பிடுங்கி சுமையாகக் கட்டித் தூக்கித் தலையில் வைத்தும், பட்டினியின் களைப்பால் திடீரென்று கீழே விழுந்து மரணமடைந்தார்.

அவரது மனைவியும், 4 குழந்தைகளும் இன்று நிர்க்கதியாகி விட்டனர். இதே மாதிரி 16 குடும்பங்கள் பட்டினிக்கு ஆளாகியுள்ளனர். (ந-நி.)

கோர்ட் தீர்ப்பை அமல் நடத்துக

பொள்ளாச்சி, ஜூலை 18—

17—7—52ல் பாக்யலக்ஷ்மி மில் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் சுமார் 50 பெண்கள் உள்பட சுமார் 200 பேர் கொண்ட ஊர்வலம் நடந்தது. தாய்மார்கள் செங்கொடியேந்தி முன்னிலையில் சென்றார்கள். பின்னர் நடந்த கூட்டத்தில், மில்லில் வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற கோர்ட் தீர்ப்பை அமல் நடத்த வேண்டுமென்றும், மற்றும் தங்களுக்குள்ள குறைகளை உடனடியாக நிவர்த்திக்க வேண்டுமென்றும் கோரி தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஐ. ஜ. மு. கூட்டம்

சங்கரன்கோவில் ஜூலை, 14—

17-7-52ல் தி. மு. க. செயலாளர் ந. சங்கரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் தோழர்கள் டி. ஆர். சுப்ரமணியன், நாகசாமி, ஆவுடையப்பன், சிவகிரி, பாண்டியன் (கம்யூனிஸ்ட்) ஆகியோர் பேசினர்.

இத் தொகுதி எம். எல். ஏ. யான ஆர். எஸ். கே. பாண்டியன் ஊர்காவலன் சுயேச்சையாக நின்று வெற்றி பெற்றும் காங்கிரஸ் சார்பாக நிற்பதால் சட்டசபை மெம்பர் பதவியை உடனே ராஜினாமா செய்ய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதிய வரிகளைக் கண்டித்து பலர் பேசினார்கள்.

பஞ்ச நிவாரண கமிஷனர் கைவிரிப்பு

பழனி தாலுகா மக்களின் பரிதாப நிலை

பழனி. ஜூலை 18—

இன்று காலை 10 மணிக்கு சென்னை மாகாண பஞ்ச நிவாரண கமிஷனர் வி. எஸ். ஹெஜ்மாடி ஐ. சி. எஸ். மதுரை ஜில்லா கலெக்டர் என். எஸ். அருணாசலம் ஐ. சி. எஸ். திண்டுக்கல் சப் கலெக்டர் முதலியவர்கள் பழனி ட்ராவலர்ஸ் பங்களாவிற்கு வந்து சேர்ந்தனர்.

பழனித் தாலுகா கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக தோழர் வி. ஏ. கருப்புசாமியும், பிரஜாகட்சி கன்வீனர், திரு பி. ராமச்சந்திரன் செட்டியாரும் தாலூகா, நகரகைத்தரி நெசவாளர் சங்கத்தின் சார்பாக, கன்வீனர் திரு. ராஜகோபாலய்யரும் வந்திருந்தனர். பழனித் தாலூகா கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் பஞ்ச நிலைமையை விளக்கி ஒரு மனுவை கமிஷனரிடம் கொடுக்கப்பட்டது.

நிவாரண வேலைகள்

உடனடியாக சர்க்கார், தற்போது வசூல் செய்யும் கிஸ்தியை நிறுத்தி வைக்க வேண்டுமென்றும், மேற்கண்ட பிர்க்காக்களில் பூரண கிஸ்தி வஜா செய்யும்படியும், மிலிட்டரியை கொண்டு கிணறுகளை ஆழப்படுத்தவேண்டு மென்றும், சர்க்காரிடம் வாங்கிய விவசாயிகளின் கடன்களை வசூலிப்பதை ஒத்தி வைக்கும்படியும், 5 வருஷ தவணையில் விவசாயிகளுக்கு கடன் கொடுத்துதவும்படியும், விவசாயக் கிணறுகளுக்கு போரிங் போட்டு கொடுக்கவேண்டு மென்றும், பாலாறு, பொருந்தாறு திட்டத்தை உடனே நடைமுறைக்கு கொண்டுவர வேண்டுமென்றும், கள்ளிமந்தயம், தொப்பம்பட்டி பிர்க்காவில் கஞ்சி தொட்டி திறக்க வேண்டுமென்றும், மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

கோதமங்கலம் ஹரிஜனங்கள், கட்டவசதி செய்து கொடுக்க வேண்டுமென்று ஒரு மனுவைச் சமர்ப்பித்தனர், கைநெசவு தொழிலாளர் சங்கத்தின் சார்பாக நூல் வாங்குவதற்கு நெசவாளருக்கு கடனாக பணம் கொடுக்க வேண்டுமென்று ஒரு மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

பிரஜாகட்சி கன்வீனர் திரு. பி. ராமச்சந்திரன் செட்டியார், கூறும்போது, மனுவில் குறிப்பிட்டுள்ள பிரதேசங்களைப் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தவேண்டு மென்றும், ரோடு மராமத்து வேலைகளை ஆரம்பிப்பதுடன், குளம், வாய்க்கால் மராமத்து வேலைகளையும் ஆரம்பிக்க வேண்டுமென்றும், விவசாயக் கிணறுகளையும், மிலிட்டிரியை கொண்டு ஆழப்படுத்த வேண்டுமென்றும், கிஸ்தி வஜா பல கிராமத்திற்குச் செய்யவில்லை என்றும், கஞ்சி தொட்டி வைக்க வேண்டு மென்றும், பிர்க்கா அபிவிருத்தித் திட்டத்தை இத் தாலூகாவிற்கு விஸ்தரிக்க வேண்டு மென்றும், கிணறு வெட்டிக் கொடுத்த கடனை வசூலிப்பதை நிறுத்தி வைக்க வேண்டுமென்றும் பாலாறு, பொருந்தலாறு திட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவருவதற்குள்ள அபிப்பிராய பேதங்களை போக்கிக்கொள்ள முடியும். ஆகையால் அத் திட்டத்தை உடனே அமுலுக்குக் கொண்டு வர வேண்டு மென்று எடுத்துக் கூறினர். கிணறுகளுக்கு மின்சார வசதி செய்துகொடுக்கும்படியும், கற்காரர்களுக்கு நிவாரணமாக பணம் கொடுத்துதவ வேண்டுமென்று இறுதியாகக் கூறி முடித்தார்.

கமிஷனர் பதில்

பின் கமிஷனரும், ஜில்லா கலெக்டரும் மனுவில் குறிப்பிட்டுள்ள விஷயங்களைப் பற்றியும், திரு. ராமச்சந்திரன் செட்டியார் கூறியவைகளுக்கும் பதில் சொல்லும்போது குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களை பஞ்சப் பிரதேசமாக குறிப்பிடவில்லை யென்றாலும். பஞ்ச நிவாரணங்கள் செய்யப்பட்டுள்ளதென்றும், இந்த வருஷம் இத் தாலூகாவில் 56 குடி தண்ணீர் கிணறுகள் வெட்டப்பட்டுள்ளதால் இதற்குமேல் இந்த வருஷம் கிணறுகள் வெட்ட முடியாதென்றும். மிலிட்டிரியை கொண்டு கிணறு வெட்டுவது அதிகச் செலவாகு மாதலால், அது சாத்தியப் படாதென்றும், ஆகையால் விவசாயக் கிணறுகளை ஆழப் படுத்த முடியாதென்றும், குள மராமத்து வேலைகளுக்கு அதிகமான ரூபாய் ஏற்கனவே செலவு செய்யப்பட்டிருக்கிற தென்றும், ரோடு வேலைகளுக்கு ஜில்லா போர்டு 1 லட்சரூபாய் செலவு செய்துள்ளதாயும், இந்தப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அந்த வேலையை செய்ய வருவதில்லை என்றும், கிஸ்தி வஜா செய்வதில் பல கிராமங்கள் தவறியதற்கு, கி. அ. ரிப்போர்ட்படிதான செய்யப்பட்டதென்றும், கஞ்சி தொட்டி வைத்து சமாளிக்க முடியாதென்றும், பிர்க்கா அபிவிருத்தி திட்டத்தை தற்சமயம் இங்கு அமுலுக்குக் கொண்டுவர முடியாதென்றும், கிணறுகளுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதற்கு சாமான்கள் கிடையாதென்றும், பாலாறு, பொருந்தலாறு திட்டத்தை சர்க்கார் கவனிக்க வேண்டிய விஷயமென்றும் கூறினார்கள். நெசவாளர்களுக்கு தற்காலிக நிவாரணமாக சர்க்கார் ஆரம்பித்த திட்டத்தை நெசவாளர்கள் விரும்பி சேரவில்லை என்றும், நெசவாளருக்கு கடன் கொடுத்துதவ சாத்தியப்படாதென்றும் கூறினார்கள். கிணறு வெட்டக் கொடுத்த கடன், தக்காவிக் கடன் இதர சர்க்கார் கடன்களையும் வசூல் செய்வதை பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் நிறுத்தி வைப்பதாகக் கூறினார்கள்.

தும்மிலப்பட்டிகுடி ஜனங்கள் வாழ்த்துமடலில் தங்கள் குறைகளை எடுத்துக் காட்டி நிவாரணம் கேட்டிருக்கின்றனர். தும்மிலப்பட்டி ஹரிஜனங்கள், புதூர் ஹரிஜனங்கள், குடிதண்ணீர் கிணறு வேண்டுமென்றும், கஞ்சி தொட்டி வேண்டுமென்றும் மனு கொடுத்தனர்,

கஞ்சி தொட்டி வைக்க முடியாதென்றும் வேலை கொடுக்க ஏற்பாடு செய்வதாகக் கமிஷனர் கூறிச்சென்றார். (ந.நி.)

கார்வேட்டி நகர் ராஜா ராஜிநாமா

சென்னை, ஜூலை 20—

கார்வேட்டி நகர் ராஜா குமாரசாமி ராஜா பகதூர், எம்.எல்.ஏ., ஐக்கிய ஜனநாயக முன்னணியிலிருந்தும், பிரஜா கட்சியிலிருந்தும் ராஜினாமா செய்திருக்கிறார்.

மக்கள் கருத்துக்களுக்கு ராஜாஜி மந்திரி சபை செவி சாய்க்கும் என அவர் நம்புகிறாராம். சர்க்காரின் உணவுக் கொள்கையைப் பற்றியும் அவருக்கிருந்த பேதங்கள் குறைந்திருக்கிறதாம்.

பிரச்சாரம் வேண்டுமாம்

ஜன எதிர்ப்பைக் கண்டு பீதி

புதுடில்லி, ஜூலை. 19—

மக்களோடு தொடர்பு அறுத்துக்கொண்டு, ஜன விரோதக் காரியங்களில் முழுமூச்சாக இறங்கி, ஜனவிரோத சட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறது காங்கிரஸ் கட்சி. அது தனது பார்லிமெண்ட் மெம்பர்களில் 60 பிரச்சார பீரங்கிகளை பொறுக்கி எடுத்து அடுத்த பார்லிமெண்ட் கூட்டம் கூடுவதற்கு முன், நாடு முழுவதும் சுற்றி, தங்கள் தொகுதி மக்களோடு நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள திட்டம் வகுத்துள்ளதாம். பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சிக் காரியதரிசி ஹரிகிருஷ்ண மஹதாப் தான் இந்தத் திட்டத்தைத் தயாரித்துள்ளாராம். அதையும் காங்கிரஸ் தலைவர் நேருவும் அங்கீகரித்துவிட்டாராம்.

நிலக் கொள்கை, சமூக அபிவிருத்தித் திட்டம், உணவுக் கொள்கை, காஷ்மீர், மொழிவாரி மாகாணம் போன்ற விஷயங்களைப்பற்றி தயாரிக்கப்பட்டுள்ள 10 பக்கம் கொண்ட குறிப்புக்கள், காங்கிரஸ் மக்களுக்கு சாதித்துள்ள காரியங்களைப் பற்றி விரித்துரைக்க மெம்பர்களுக்கு மிகவும் பேருதவியாக இருக்குமாம்.

காங்கிரஸ் சரித்திரத்திலேயே இத்தகைய சுற்றுப் பிரச்சார திட்டம் போடப்பட்டுள்ளது இது தான் முதல் தடவையாம்.

வானொலி

ஜூலை 23. புதன்

சென்னை (41·32மீ)

காலை:
7-00 ஸ்வாகதம்
7-15 தமிழில் செய்தி
7-30 வேலூர் எஸ். டி. விஸ்வநாதய்யர்-வீணை
8-00 ஆங்கிலத்தில் செய்தி

பகல்:
12-30 நடுத்தரபள்ளிகளுக்கு
1-00 மாதர் நிகழ்ச்சி
1-30 கீதமஞ்சரி
1-40 ஹிந்தியில் செய்தி
1-50 கதம்பம்
2-00 தமிழில் செய்தி
2-10 கோட்டுவாத்தியம்
2-15 உயர்தரப்பள்ளிகளுக்கு

மாலை
4-00 ஆரம்ப பள்ளிகளுக்கு
4-30 ஐரோப்பிய சங்கீதம்

இரவு
5-30 கே. வி. சரோஜா—பாட்டு
6-00 ஆங்கிலத்தில் செய்தி
6-10 அறிவிப்புகள்
6-20 எஸ். கே. வேதா—பாட்டு
7-00 கதம்பம்
7-15 தமிழில் செய்தி
7-30 ஜந்தர சம்மேளனம்
7-45 மாகாண முன்னேற்றம்
8-00 செங்கோட்டை கங்காதரன்—பாட்டு
8-30 சுப்பராய சாஸ்திரி பாடல்கள் (ஒலிப்பதிவு)
9-00 ஆங்கிலத்தில் செய்தி
9-15 பெட்ரோலியம்—ஜ. ஜே. இங்கிலிஷ் (ஆங்கிலச் செய்தி)
9-30 தஞ்சாவூர் பி. ஆர். மணி—சாக்ஸபோன்

★

திருச்சி (389·6மீ)

காலை
7-10 கீதாரம்பம்
7-15 தமிழில் செய்தி
7-30 சிதம்பரம் எஸ். ஜெயராமன்—பாட்டு
7-45 மாகாண முன்னேற்றம்—பேச்சு
8-00 ஆங்கிலத்தில் செய்தி
8-15 சித்ரகானம்

பகல்
12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு
1-00 கதம்பம்
1-40 ஹிந்தியில் செய்தி
1-50 வாத்ய இசை
2-00 தமிழில் செய்தி
2-10 எஸ். ராஜு—இசைத்தட்டுகள்
2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு

மாலை
4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு

இரவு
5-30 எம். என். நடராஜ பிள்ளை—புல்லாங்குழல்
5-45 இசைப் பயிற்சி
6-05 அறிவிப்புகள்
6-10 நீங்கள் கேட்டவை
6-30 கிராம நிகழ்ச்சிகள்
7-15 தமிழில் செய்தி
7-30 திரைகானம்
7-45 சென்னையில் உள்ளபடி
8-00 பாசப்பிடிப்பு—நாடகம்
9-00 ஆங்கிலத்தில் செய்தி
9-15 சிதம்பரம் எஸ். ஜெயராமன்—பாட்டு

இலங்கை இந்தியருக்கு நியாயம் வழங்குக!

இலங்கை பிரதமருக்கு இரண்டாவது மகஜர்

கொழும்பு, ஜூலை 19—

இன்று இலங்கைப் பிரதமருக்கு, இலங்கை இந்தியர் காங்கிரஸ் இரண்டாவது மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளது. அதில், பிரஜா உரிமைக் கமிஷனரிடம் இலங்கையில் தொடர்ந்து வாழ்ந்த காலத்தை நிரூபிப்பதுதான் கஷ்டம் என்று குறிப்பிட்டுள்ளனர். [illegible] தோட்டத் தொழிலாளர்கள் நிரூபிப்பதென்பது காரியசாத்தியமற்றதெனவும் எடுத்துக்காட்டியுள்ளனர். இதுபற்றிய சட்ட விதிகளை சுலபமாக்கும்படி மகஜரில் கோரப்பட்டுள்ளது.

இலங்கையில் [illegible] இலங்கை இந்தியர்களும், இதர சமூகத்தாரைப் போல வாழும் பிரஜா உரிமையை அளித்து முழு நியாயம் வழங்கும்படி [illegible] அந்த மகஜர் வற்புறுத்துகிறது.

வரி எதிர்ப்புக் கூட்டம்

காக்கயநல்லூர், ஜூலை 17—

விவசாயிகள் சங்க சார்பாக, இன்று திரு. வடிவேல் தேவர் தலைமையில் நடந்த பொதுக் கூட்டத்தில் திரு. ஆர். வி. அனந்தகிருஷ்ணன் பேசுகையில், சென 2 ஆண்டுகளில் தீவிர விவசாய சீர்திருத்தம் செய்து, நாட்டைத் தொழில் மயமாக்கிவேலையில்லாத்திண்டாட்டத்தை ஒழித்துள்ள போது நம் நாட்டில் காங்கிரஸ் அரசாங்கம் மேலும்மேலும்புது வரிகள் போடுவதைக் கண்டித்தார். மது இலாகா, போலீஸ் இலாகா செலவுகளைக் குறைக்க வேண்டுமென்று வற்புறுத்தினர்.

போடிநாயக்கனூர் சப்-இன்ஸ்பெக்டர் எம். கணபதி பாண்டியன் என்பவரை டிஸ்மிஸ் செய்ய வேண்டுமென்றும், சர்க்கார் மின்சார இலாகா விஸ்தரிப்பை நிறுத்தியதைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறின.

நியாய விலையில் தானியம் கொடு!

செங்கோட்டை, ஜூலை 15—

தெ. இ. ர. லேபர் யூனியன் சார்பில் 13ந் தேதி மாலை 6.30 மணிக்கு தோழர் வி. ஆர். ராஜு தலைமையில் விஸ்வநாத புரத்தில் [illegible] நடைபெற்றது.

தோழர்கள் காமாட்சி, சண்முகம், ராமையா, சுந்தர்ராஜு, அழகர்சாமி ஆகியோர் பேசினர்.

ரயில்வே தானியக் கடைகளில், சர்க்கார் மலிவு தானியக் கடைகளில் [illegible] தொழிலாளருக்கு வழங்க வேண்டுமென்று இன்னும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ந.நி)

வழக்கு தள்ளுபடியான பின்னும் கைது

மாயூரம், ஜூலை 18—

மணல்மேடு பகுதியைச் சேர்ந்த பட்டவர்த்தி கிராம சேரியில் வசிக்கும் கோவிந்த சாம்பான் என்பவரை 16-7-52 காலை சுமார் 10 மணிக்கு மணல்மேடு போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் ஒரு போலீஸ் சேவகரும் [illegible] கைது செய்துள்ளனர்.

இதே கோவிந்த சாம்பான் மீது [illegible] அக்கேஸ் 14-7-52ம் தேதி [illegible] தள்ளுபடி செய்யப்பட்டது. [illegible] (ந-நி)

பஸ் கட்டண சர்சார்ஜிற்கு தி. க. மத்ய நிர்வாகக் கமிட்டி கண்டனம்

ஆகஸ்டு முதலிலிருந்து ஹிந்தி பெயர் அழிப்பு இயக்கம் ஆரம்பமாகும்

திருச்சி, ஜூலை, 20—

ரயில்வே பிளாட்பாரங்களில் ஹிந்தியில் உள்ள பெயர்களை எல்லாம் அழிக்க ஆகஸ்ட் முதல் தேதியிலிருந்து இயக்கம் நடத்துவதென திராவிட கழக மத்திய நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் இன்று தீர்மானித்தது.

பெரியார் இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு திராவிட கழக மத்திய நிர்வாகக் கமிட்டித் தலைவர் தோழர் தி' பொ. வேதாசலம் தலைமை வகித்தார்.

விருப்பமில்லாத ஜனங்கள் மீது ஹிந்தியை நிர்ப்பந்தமாக திணிக்கும் போக்கு நாளுக்கு நாள் அதிகமாவதை எதிர்த்து திராவிடஸ்தான் மக்களின் அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்வதற்காகத்தான ஆகஸ்டு முதல் தேதியிலிருந்து ஹிந்தி பெயர் அழிப்பு இயக்கம் ஆரம்பிக்கப் படுகிறதாம்.

பஸ் கட்டணத்திற்கு சர்சார்ஜ் விதிக்க ராஜாஜி மந்திரி சபை தீர்மானித்துள்ளதை கமிட்டி கண்டித்தது. இந்த உத்தேசத்தைக் கைவிடும்படியும சர்க்காரைக் கேட்டுக் கொண்டது.

தேர்தலின்போது காங்கிரசை எதிர்த்து நின்று போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர், இன்று சட்ட சபையில் காங்கிரசுக்கு ஆதரவாக நிற்கும் எம். எல். ஏ.க்களின் நடத்தையை கமிட்டி கண்டித்தது.

திராவிட மக்கள் மீது ஹிந்தியைத் திணிக்கும் கொள்கையை எதிர்த்துக் கண்டனம் செய்ய ஜூலை 27-ம் தேதியன்று திராவிட நாடெங்கும் ஆர்ப்பாட்டங்களும், பொதுக் கூட்டங்களும் நடத்தும்படி கமிட்டி அறைகூவல் விடுத்தது.

கூட்டத்தில் பெரியார் ஈ. வே. ராமசாமியும், டாக்டர் சிற்றம்பலம் எம். எல். ஏ.யும் கலந்து கொண்டனர்.

தீனதயாபர கொக்குகள்!

சென்னை, ஜூலை, 20—

சென்னை ஏழுகிணறு குட்டி மேஸ்திரி தெரு மைதானத்தில் 19-7-52 சனி மாலை 5 மணி முதல் மார்வாரி ஜெயின் அன்னதான சாலாவின் சார்பில் 2000 ஏழைகளுக்கு சோறு போடுவதாய் தெரிவித்து வீதிகளில் கிடந்த பரம்பரை பிச்சைக்காரர்களை கொண்டு வந்து காலை 9 மணி முதல் இரவு 8-15 வரை காத்துக் கிடக்கச் செய்தனர். பின்னர் 8-30 மணிக்கு சிலருக்கு பயன்படாத சோறு போடப்பட்டது. வெறுப்புக்கொண்ட பிச்சைக்காரர்கள் சிலர் எளனம் செய்துகொண்டே திரும்பினர் தோழர்கள் வி. சண்முகம் சி. ஏழுமலை ஆகியோர் மாலை 5 மணிக்கு குட்டி மேஸ்திரி தெரு வீதியிலுள்ள தங்களது இல்லத்தில் தி. மு. க. கொடியை ஏற்றி வைத்தமைக்கு டி இரு தோழர்களும் கைது செய்யப்பட்டு இரவு 8-20 மணிக்கு விடுதலை பெற்றனர். சுமார் இரவு 9 மணிக்கு எச். எச். கே. மோதிலால் போரா என்பவர் தோழர் சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களைப் பற்றி புகழ்ந்து பேச ஆரம்பித்தவுடன் 1938-ம் ஆண்டு ஆட்சியில் கட்டாய ஹிந்தியை எதிர்த்த ஏழுகிணறு தொகுதியைச் சேர்ந்த தோழர் எல். நடராசனையும், குடந்தையைச் சேர்ந்த தாலமுத்துவையும் சிறையிலடைத்து உயிர்பலி வாங்கிய கொடுங்கோலனைப் பற்றி இத் தொகுதியில் புகழ்ந்து பேசாதே என்று ஏழு கிணறு தொகுதி பொதுமக்களால் எதிரொலி செய்த காரணத்தால் தோழர் வி. சண்முகம் என்பவர் மீண்டும் கைது செய்யப்பட்டு 75வது பிரிவின்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

இறுதியில் 'ஆச்சாரியார் ஆட்சி ஒழிக' 'வடநாட்டு ஆட்சி ஒழிக' என்னும் ஒலிகளோடு கூட்டம் முடிவுற்றது.

சே. ஆரோக்கியதாசன்,
செயலாளர்,
இளைஞர் சீர்திருத்த கழகம்,
ஏழுகிணறு, சென்னை.

மந்திரி நியமிக்கவும்!

ஜலகண்டபுரம், ஜூலை 16—

இன்று நெசவுத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்திற்கு தோழர் எம். பி. ஒபிளி தலைமை வகித்தார்.

சர்க்கார் கைத்தறி துணியை ஏற்றுமதிசெய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், கைத்தறி ஜவுளியின் உற்பத்தி விலையை குறைக்க வேண்டுமெனவும், தொழிலாளிகளுக்கு நியாயமான கூலி கிடைக்கும்படி செய்ய வேண்டுமெனவும், இவ்வாறு செய்ய நூல்விலையை 1946 விலைக்கு குறைக்கவேண்டு மெனவும், மாகாணத்திலுள்ள 6 லக்ஷம் தறிகளுக்கு நிவாரணம் அளிக்கவேண்டுமென்றும், நெசவுத் தொழிலுக்கென ஒரு மந்திரியை நியமிக்கவேண்டுமெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிலப்பிரபு-கிஸான் தகராறு

5 பேர் மரணம், 10 பேர் படுகாயம்

ஜோத்பூர், ஜூலை, 20—

நில உடைமை சம்பந்தமாக கிஸான்களுக்கும் ஜாகீர்தார்களுக்கும் நடந்த சண்டையில் 5 பேர் கொல்லப்பட்டனர். 10 பேர் படுகாயமடைந்தனர். நிலங்களில் வேலை செய்து கொண்டிருந்த கிஸான்கள், துப்பாக்கிகள், மற்றும் பல ஆயுதங்கள் கொண்ட கூட்டத்தினரால் தாக்கப்பட்டனர்.

ஆயுதந் தாங்கிய போலீஸ் அரசாங்கத்தால் அனுப்பட்டிருக்கிறது.

பரதப்பால், நெவாடெஹ்ற சில் கிராமப் பகுதிகளில் நிலப் பிரபுக்களுக்கும், விவசாயிகளுக்கும் தகராறுகள் எழுந்திருப்பதாக செய்திகள் வந்துள்ளன.

மாணவர் ஸ்ட்ரைக்

உஜ்ஜயினி, ஜூலை 20—

பள்ளிக்கூட சம்பளங்களைக் குறைக்க வேண்டுமென்பதற்காக, ராஜ்ய கல்வி மந்திரியைச் சந்தித்த உஜ்ஜயினி மாணவ தூதுகோஷ்டி ஏமாற்றத்துடன் திரும்பியது. அவர்களுடைய கோரிக்கைகளை மந்திரி கவனிக்க மறுத்துவிட்டார் என மாணவர் [illegible] திரு பாபுலால் [illegible] கூறினார், [illegible] அரசாங்கம் [illegible] மாணவர் ஸ்ட் [illegible]

நெசவாளர்களின் நெருக்கடி தீர ராஜாஜியின் யோசனை!

மில் உற்பத்தியைக் குறைத்து எல்லோரும் கைத்தறி துணி வாங்கினால்

பிரச்னை தீர்ந்துவிடுமாம்!

சென்னை, ஜூலை 21—

எதிர்காலத்தில் வேஷ்டிகளும், சேலைகளும் நெய்வதற்குக் கைத்தறித் துணிக்கே முதலிடம் கொடுக்கும்படி தான் மத்திய சர்க்கா[illegible] சிபார்சு செய்திருப்பதாகவும், அது நடந்தால் கைத்த[illegible] நெசவுத் தொழிலாளிகளின் கஷ்டங்களெல்லாம் மறைந்துவிடும் என்றும், ராஜாஜி நேற்று சைதாப்பேட்டையில் கூறினார்.

ராஜாஜி மேலும் பேசுகையில் கைத்தறி நெசவுத் தொழிலாளிகளின் எல்லா பிரச்னைகளைப் பற்றியும் கஷ்டங்களைப் பற்றியும் தனக்கு மிகவும் நன்றாகத் தெரியுமென்றார்.

தென் சென்னை வரி கொடுப்போர் சங்கத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அக் கூட்டத்திற்கு திரு சி. ஆர். ராமசாமி தலைமை வகித்தார்.

ராஜாஜி பேசுகையில், "இப்பொழுது தேங்கியிருக்கும் ஸ்டாக்கை சர்க்கார் வாங்கினால் பிரச்னை தீர்ந்துவிடாது. ஒரு வாரத்திற்குள் மேலும் ஸ்டாக்குகள் தேங்கிவிடும்" என்றார்.

மில்களி[illegible] போட்டிதான் அடிப்படை[illegible] பிரச்சினை என்றும், எ[illegible]லாரும் கைத்தறித் துணிகளையே போட ஆரம்பித்தால் பிரச்னையே தீர்ந்துவிடும் என்றார்.

[illegible]மில்கள் வேஷ்டிகளையோ, [illegible]களையோ உற்பத்தி செய்[illegible] கூடாதென்று தடை[illegible] வேண்டுமென்றும், [illegible]

சமூக அபிவிருத்தி . .

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கார் ஒரு தெளிவான திட்டத்தைக் கொடுக்கவில்லை, அரசாங்கம் ஒரு கட்சியினரால் நடத்தப்படுவதால் நிர்வாகத்தார்கள் நியமனம் செய்யக் கூடாது என்றார்.

திரு பட்டம் தாணுப்பிள்ளை சர்க்கார் செய்துள்ள ஜனநாயக விரோதமான செயலை வன்மையாகக் கண்டித்தார் சர்க்கார் சபையின் நியாயமான அபிப்பிராயத்திற்கு இணங்கி தங்களுடைய போக்கை கைவிடாவிட்டால் நியமன உரிமை கமிஷனுக்கு விடாவிட்டால் தான் திருத்தப் பிரேரணையை ஆதரிக்கப்போவதாகக் கூறினார்.

முதலமைச்சர் பேசுகையில் தன்னுடைய சர்க்காரின் செய்கை மிகவும் நியாயமானது என்று வாதாடினர். அவசர அவசியமாக நியமனங்களை செய்யவேண்டிய திருப்பதால் கமிஷனை கலக்கநேரமில்லை என்று மழுப்பினர்.

நில வெளியேற்றத்திற்கு அத்தாட்சி

மாயூரம், ஜூலை 19—

மாயவரம் தாலுக்கா கடுவங்குடி கிராமம் ஜயப்ப செட்டியார் தர்ம சத்திரத்தை சேர்ந்தது. மொத்த நிலம் 20 வேலியை வீரப்ப சேர்வை என்பவர் மொத்த குத்தகை எடுத்துள்ளார். சென்ற பசலியில் அவரிடம் சாகுபடி செய்த 26 விவசாயிகளுக்கு இந்த பசலிக்கு நிலம் கொடுக்க மறுக்கிறாராம். வெளி ஊர்களிலிருந்து ஆட்களைக் கொண்டுவந்து சாகுபடி செய்ய முயற்சிக்கிறாராம்.

நடக்கவிருப்பவை

22-7-52ம் தேதி மாலை $6\frac{1}{2}$ மணிக்கு மயிலாப்பூர் ரானடே ஹாலில், சமாதானக் கமிட்டியின் சார்பில் "யாலு நதி குண்டு வீச்சை"க் கண்டிக்க ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும், தினத்தந்தி ஆசிரியர் திரு. ஆதித்தன், ஆந்திர சமாதான கமிட்டி தலைவர் வாஸிலால கோபால கிருஷ்ணய்யா, டாக்டர் கிருஷ்ணபிள்ளை முதலியோர் கலந்துகொள்வர்.

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவில் எதிரில் மதராஸ் பிரஸ் லேபர் யூனியன் சார்பில் 22-7-52 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறும் தோழர் தி. மு. ஆறுமுகம் பிள்ளை தலைமை வகிப்பார். தோழர்கள் கே. முருகேசன் முகவை ராஜமாணிக்கம், என். சிவராஜ் எம். எல். ஏ., டி. எஸ் அர்த்தநாரி எம். எல். ஏ. முதலியோர் பேசுவர்.

Edited, Printed & Published by G. Alavandar, at Janasakti Press, Subodaya Buildings, 38, Mount Rd, Madras 6.